புதன் | புரட்டாதி 1 | 📖 மாலை வாசகம் – 1 தெச 5:12

# புத்திமதியை ஏற்றுக்கொள்

தொற்று நோய்க் கிரிமியின் வீரியம் பயங்கரமாக இருப்பதால், அநாவசியமாக வெளியிலே சென்று வருவதைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என்று ஒரு மனிதனானவன், தன் நண்பர்களுக்கு அறிவுரை கூறினான். நண்பர்களில் ஒருவன் அதற்கு மறுமொழியாக: நீ தானே, எல்லாருடைய அறிவுரையையும் அசட்டை செய்து கண்டபடி அலைந்து திரிந்து, நோய்வாய்ப்பட்டு மரணப்படுக்கையிலே இருந்தாயே, இப்போது நீ எங்களுக்கு அறிவுரை கூறுகின்றாயா என்றுஅவனைக் கேலி செய்தான். அதற்கு அந்த மனிதன்: நண்பா, நான் அறிவரையை அசட்டை செய்து கண்டபடி அலைந்து திரந்தது உண்மையே, அதனால் எனக்கும் என் குடும்பத்திற்கும் ஏற்பட்ட பெரும் பாதிப்புக்களின் நோவை நான் அனுபவித்தபடியால் தான் இவற்றை உங்களுக்கு கூறுகின்றேன் என்று பதில் கூறினான். “எங்களுக்கு உபதேசிப்பதற்கு இவர் யார்? எங்களுக்கு அறிவுரை கூறும் அந்த மூப்பரின் முந்நிலைமையானது எங்களுக்குத் தெரியும். உங்களுடைய பிள்ளைகள் செய்யாததையா எங்கள் பிள்ளைகள் செய்கின்றார்கள்” இப்படியாக தங்களுக்கு ஆலோசனை கூறும் ஊழியர்கள், மூப்பர்களுக்கு எதிராக சில தேவ பிள்ளைகள் குரல் எழுப்புகின்றார்கள். யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள் என்று வேதம் நமக்கு ஆலோசனை கூறுகின்றது. அதன்படி உங்களுக்கு ஆலோசனைகள் கூறப்படும் போது, முதலாவதாக, அந்த ஆலோசனையை கேளுங்கள். அதை வேத வசனங்களுடன் ஆராய்ந்து பாருங்கள். பின்பு, உங்கள் வாழ்க்கையோடு தியானியுங்கள். உங்களுக்குள்ளே பிரயாசப்பட்டு, கர்த்தருக்குள் உங்களை விசாரணைசெய்கிறவர்களாயிருந்து, உங்களுக்குப் புத்திசொல்லுகிறவர்களை கனத்தோடு ஏற்றுக் கொள்ளுங்கள். ஒரு வேளை ஆலோசனை கூறுபவர்களில் சிலர் சில தவறுகளை விட்டுவிடுவதால், நாம் தேவனுடைய போதகத்தை தள்ளிப் போடக்கூடாது. இன்று நாம் ஒவ்வொருவரும் நம்முடைய வாழ்க்கையை ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந்த ஆண்டிலே எனக்கு தேவ ஆலோசனைளை கூறினவர்களை நான் கனப்படுத்தினேனா அல்லது அவமதித் தேனா? ஆலோசனையை கூறும் போது என்ன செய்தேன்? நாம் ஞானமுள்ளவர்களாக இருக்கும்படிக்கு ஆலோசனைகளை கேட்டு அதன்படி நடக்கக்கடவோம்.

**நீதிமொழிகள் 19:20**

**உன் அந்தியகாலத்தில் நீ ஞானமுள்ளவனாயிருக்கும்படி, ஆலோசனையைக் கேட்டு, புத்திமதியை ஏற்றுக்கொள்.**

**ஜெபம்:** ஆலோசனை தந்து நடத்தும் தேவனே, உம்முடைய ஆலோசனைகளை கூறுகின்றவர்களை நான் மதித்து, அதன்படி என் வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்து உம் வழியிலே நடக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# குறைவற்ற வேதம்

**சங்கீதம் 19:7**

கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது;

தாவீது ராஜாவின் குமாரனாகிய சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீதின் ஸ்தானத்திலே ராஜாவாகியபோது, தேவனாகிய கர்த்தரிடத்திலே அன்புகூர்ந்து அவர் கட்டளைகளிலே நடந்தான். தன் ராஜ்யத்திலிருந்த ஏராளமான ஜனங்களை நியாயம் விசாரிக்கும்படி ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும் என்று தேவனித்திடத்திலே கேட்டான். இந்தக் காரியத்தைக் கேட்டது ஆண்டவருடைய பார்வைக்கு உகந்த விண்ணப்பமாயிருந்தது. ஆகையினால் தேவன் அவனை நோக்கி: நீ உனக்கு நீடித்த நாட்களைக் கேளாமலும், ஐசுவரியத்தைக் கேளாமலும், உன் சத்துருக்களின் பிராணனைக் கேளாமலும், நீ இந்தக் காரியத்தையே கேட்டு, நியாயம் விசாரிக்கிறதற்கு ஏற்ற ஞானத்தை உனக்கு வேண்டிக்கொண்டபடியினால், உன் வார்த்தைகளின்படி செய்தேன்; ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தை உனக்குத் தந்தேன் இதிலே உனக்குச் சரியானவன் உனக்குமுன் இருந்ததுமில்லை, உனக்குச் சரியானவன் உனக்குப்பின் எழும்புவதுமில்லை. இதுவுமன்றி, நீ கேளாத ஐசுவரியத்தையும் மகிமையையும் உனக்குத் தந்தேன் உன் நாட்களில் இருக்கிற ராஜாக்களில் ஒருவனும் உனக்குச் சரியானவன் இருப்பதில்லை என்று அவனை ஆசீர்வதித்தார். சாலொமோன் ராஜா, தேவன் கொடுத்த ஞானத்தின்படி, நம் நடைகளை நாம் காத்துக் கொள்ளும்படி பல தேவ ஆலோசனைகளை நமக்கு எழுதி வைத்துள்ளார். அந்த வார்த்தைகள் உண்மையுள்ளவைகள். கர்த்தருடைய வேதம் குறைவற்றது. ஆனால், சாலொமோன் வயது சென்ற போது, தேவன் கொடுத்த வார்த்தைகளை மீறி நடந்ததால், கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து அந்நிய தேவர்களைப் பின்பற்றிப் போனான். அவன் நிறைவான கர்த்தருடைய வேதத்தை தள்ளி விட்டதால், தேவன் சாலொமோன் ராஜா வழியாக நமக்கு வெளிப்படுத்திய தேவனுடைய ஆலோசனைகளை நாம் தள்ளி விட முடியாது. நாம் சாலமோன் ராஜாவின் அடிச்சுவடுகளை பின்பற்றி செல்பவர்கள் அல்லர். மாறாக, சாலமோன் ராஜா வழியாக தேவன் நமக்குத் தந்த ஆலோசனைகளையும், புத்திமதிகளையும் ஏற்று, தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து, அந்த கட்டளைகளின்படி நம்முடைய இருதயத்தை எல்லாக் காவலோடும் காத்துக் கொள்ள வேண்டும். எனவே, மற்றவர்களின்வாழ்வில் ஏற்படும் தவறுகளால், வாழ்வு தரும் வேதத்தை அசட்டை பண்ணாத படிக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

**ஜெபம்:** நித்திய வாழ்விற்குரிய ஆலோசனைகளை தந்த தேவனே, மற்றவர்கள் உம் ஆலோசனைகளை தள்ளிவிடுவதால், நானும் அவைகளை தள்ளிவிடாதபடிக்கு பிரகாசமுள்ள மனக் கண்களை தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பரிசுத்த அழைப்பு

ஆதியிலே தேவன் பரிசுத்த மெய் விவாகத்தை ஏதேனிலே ஏற்படுத்தி னார். அதன் பின்பு, மனிதர்கள் திருமண நாளானது மிகவும் சந்தோ ஷமான ஒரு நாளாகவும், அந்த நாளை மேன்மைப் படுத்த வேண்டும் என்று பல வைபவங்களை படிப்படியாக ஆரம்பித்தார்கள். யார் யாருடன் சம்பந்தம் கலப்பது? என்ற கேள்வியிலிருந்து திருமண விழா நடக்கும் நாள் வரைக்கும் பல சடங்குகள் நடைபெறுகின்றது. காலப்போக்கில், அவை பாரம்ப ரியமும் களியாட்டமுமாக மாற்ற ப்பட்டு, இன்று ஒரு திருமண விழாவானது நீண்டதும் பல நிக ழ்ச்சிகளை உள்ளடக்கியதாகவும் இருக்கின்றது. அதனால் பல மனிதர்கள், ஆதியிலே தேவன் ஏன் திருமணத்தை ஏற்படுத்தினார் என்பதன் கருப்பொருளை மறந்து அதைக்குறித்த எண்ணமற்றவர்களாக வாழ்கின்றார்கள். இதன்விளை வாக, திருமணத்திற்குப் முன் நடக்க வேண்டியவைகள் பின்னராகவும், திருமணத்திற்கு பின் நடக்க வேண்டியவைகள் முன்னதாகவும் நடை பெறுகின்றது. அது மட்டுமல்லாமல் தேவன் குறித்த திருமணத்தின் வரைவிலக்கணத்தையே இன்று பல நாடுகள் மாற்றிக் கொண்டு வரு கின்றது. கருப்பொருளாவது, தேவன் முன்குறித்த காரியங்களோடு, நாம் இந்த உலக பாரம்பரியங்களையும், சடங்குகளையும் சேர்த்துக் கொள் ளும் போது, ஆண்டுகள் கடந்து சென்று புதிய சந்ததிகள் வரும்போது, அவர்கள் தேவன் முன்குறித்ததை அவர் ஏன் முன் குறித்தார் என்பதை மறந்து, பாரம்பரியங்களையும், சடங்காச்சாரங்களையும், களியாட்டங் களையும் பற்றிக் கொள்கின்றார்கள். திருமணம் மட்டுமல்ல, தேவன் முன்குறித்தவைகளுடன் இந்த உலக முறைமைகளை சேர்த்துக் கொள் வதைக் குறித்து நாம் மிகவும் எச்சரிக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும். இப்படியாக, மனிதர்கள் பிள்ளைகளை பெற்றுக் கொள்வ திலும், வளர்ப்பதிலும், பாடசாலைக்கு கொண்டு செல்வதிலும், பொழுது போக்கிலும், பல உலக வழிமுறைகளை உட்படுத்திக் கொள்வதால், இவர்கள் அவர்களது வாழ்க்கையில் மதவழிமுறைகளிலும் பாரம்பரி யங்களிலும், சடங்காச்சாரங்களிலும் ஒரு பகுதியாகவே மாறிக் கொண்டு போகின்றது. பிதாவாகிய தேவன்தாமே, நாம் பரிசுத்த வாழ்வு வாழு ம்படிக்கு, இயேசுவின் நாமத்திலே பரிசுத்த அழைப்பினாலே நம்மை அழைத்தார் என்பதை நன்கு உணர்ந்தவர்களாக எதைச் செய்தாலும் அழைப்பின் நோக்கத்தை மறந்து விடாதிப்போமாக.

**2 தீமோத்தேயு 1:9**

ஆதிகாலமுதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும், நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்.

**ஜெபம்**: பரிசுத்த வாழ்வு வாழும்படிக்கு என்னை வேறுபிரித்த தேவனே, என் வாழ்வில் நடக்கும் எந்த வைபவங்களிலும் உமக்கு விரோதமாக பாவம் செய்யாதபடிக்கு என்னை காத்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

**வெள்ளி | புரட்டாதி 4** | 📖 மாலை வாசகம் – 1 தீமோ 5:17

# கேட்டவைகளை விட்டுவிலகாதபடிக்கு...

> **எபிரெயர் 2:1**
>
> **ஆகையால், நாம் கேட்டவைகளை விட்டுவிலகாதபடிக்கு, அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய்க் கவனிக்கவேண்டும்.**

ஆண்டவராகிய இயேசு இந்த உலகத்திலே பாலகனாக பிறந்த போது, தேவதூதன், பயப்படாதிருங்கள் இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன் என்று தங்கள் மந்தையைக் காத்துக் கொண்டிருந்த மேய்ப்பர்களுக்கு கூறினான். அந்த நாளை கிறிஸ்துமஸ் தினம் என்று இன்று நினைவு கூருகின்றோம். ஆனால் இன்று கிறிஸ்மஸ் என்றால் என்ன என்ற கேள்வியை கேட்கும் போது, பொதுவாக மனிதர்களுடைய பதில் எப்படியாக இருக்கின்றது? அது விடுமுறையின் நாட்கள். கிறிஸ்துமஸ் மரத்தை வைத்து சோடினை செய்வோம். புது ஆடைகளை வாங்குவோம். கிறிஸ்துமஸ் தாத்தா வருவார். புதிய பாடல்களைப் பாடுவோம். பரிசுப்பொருட்களை வாங்கி ஒருவருக்கொருவர் பரிமாறுவோம் என்றும், புசித்துக் குடித்து உல்லாசமாக இருப்போம் என்ற செய்தியையே உலகம் அறிந்திருக்கின்றது அல்லது உலகதிற்கு அறிவிக்கப்படுகின்றது. அதாவது ஆண்டவர் இயேசு இந்த உலகிற்கு வந்த நற்செய்தியை குறித்து மனிதர்கள் பேசாதபடிக்கு, அந்த நாள் வியாபாரமயமாக்கப்பட்டிருக்கின்றது. அதுபோலவே, ஆண்டவராகிய இயேசு மரணத்தை வென்று உயிர்த்த நாளின் சமாதானத்தின் நற்செய்தியை மனிதர்கள் அறியாதபடிக்கு அந்த நாளிலும் வேறு உலக காரியங்களை உட்புகுத்தி வியாபாரமயமாக்கப்படுகின்றது. அதுமட்டுமல்லாமல், இந்த உலகிலே எப்படிப்பட்ட பெருநாளாக இருந்தாலும் அதை மனிதர்கள் தங்கள் சொந்த இலாபத்திற்காக வியாபாரமயமாக்கி விடுகின்றார்கள். உதாரணமாக, ஞானஸ்நானம் பெற்று ஆண்டவராகிய இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளும் நாள் மிக மகிழ்ச்சியானது. அந்த நாளில் உணவுகளை பரிமாறி சந்தோஷமாக இருப்பதில் தவறில்லை. ஆனால் மனிதர்கள் உட்புகுத்தும் கொண்டாட்டங்களினால், ஞானஸ்நானத்தின் முக்கியத்துவமும், பரிசுத்தமும், பயபக்தியும், தேவ பயத்தைக் குறித்த உணர்வும் அற்றுப் போய்விடாதபடிக்கு நாம் மிகுந்த ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இன்று மனிதர்களின் மனதை கவர்ந்து அவர்களின் அங்கீகாரத்தை பெறும்படியாக சத்தியம் கலப்படமாக்கப்படுகின்ற காலமாக இருக்கின்றது. நாம் செய்யும் எந்த கிரியைகளிலும் பிதாவாகிய தேவனுடைய நாமம் மகிமைப்பட வேண்டும் என்பதை ஒரு போதும் மறந்து போய்விடாதிருங்கள்.

**ஜெபம்:** பரிசுத்தமுள்ள தேவனே, எங்கள் மனம் கிறிஸ்துவைப்பற்றிய உண்மையினின்று விலகும்படி தேவ காரியங்களோடு உலக காரியங்களைச் சேர்த்துக் கொள்ளாதபடிக்கு பிரகாசமுள்ள மனக் கண்களை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஆராதனைக்கு அவசியமானவைகள்?

சில தசாப்தங்களுக்கு முன்னராக, மூன்றாம் உலக நாடுகளொன்றில் வசித்து வந்த வசதியுள்ள குடும்பத்தினர், தங்களுடைய 17 வயதுள்ள மகனானவனை உயர்கல்வி படிக்கும்படியாக ஒரு தனியார் கல்வி நிலையமொன்றிலே சேர்த்து விட்டார்கள். மகனானவன் தன் பெற்றோரை நோக்கி: நீங்கள் எனக்கு கார் வாங்கி கொடுத்தாலொழிய நான் அங்கு படிக்கச் செல்ல மாட்டேன் என்று பிடிவாதாமாக இருந்தான். அவன் கல்வி கற்க வேண்டும் என்பதற்காக அவன் பெற்றோர் அவனுக்கு ஒரு காரை வாங்கி கொடுக்க வேண்டியதாயிற்று. தன் வாழ்வின் முன்னேற்றத்திற்காக கல்வி கற்பதற்கு கார் அத்தியவசியமான தேவை அவன் என்று எண்ணிக் கொண்டான். இந்த நிலை எப்படியாயிற்று? சற்று சிந்தித்துப் பாருங்கள். இவ்வண்ணமாக மனிதர்கள் தங்களது வாழ்வின் முக்கியமான காரியங்களை நடப்பிப்பதற்குரிய தேவை என்ன என்பதை மறந்து விடுகின்றார்கள். இன்றைய உலகிலே, தேவனை ஆராத்திப்பதற்கு அவசியமானது என்ன என்ற கேள்விக்குரிய பதிலும் இவ்வண்ணமாகவே மாறிக் கொண்டே போகின்றது. ஒலிப்பெருக்கி சாதனங்கள், பல இசைக்கருவிகள், கம்யூட்டர் சாதனங்கள், இனிமையான பாடல்கள், அடுக்கடுக்கான வார்த்தைகளை பேசுபவர்கள், பிரபல்யமான மனிதர்கள் என்று பட்டியல் நீண்டு கொண்டே போகின்றது. இவைகள் தொலைக் காட்சிகளிலும், இன்ரநெற் ஊடகங்கள் வழியாகவும் பார்க்கும்இளயதலைமுறையினரும்,எளிமையான சபைகளிலே தேவனை ஆவியோடும் உண்மையோடும் ஆராதித்து வரும் தேவ பிள்ளைகளும் தேவனை துதிப்பதன் கருப்பொருளை மறந்து போய்விடுகின்ற காலமாக இருக்கின்றது. சிலர், தேவனாகிய கர்த்தர் நியமித்த வாழ்வின் ஒழுங்குகளை வியாபாரமயமாக்குவதைப் போல, தேவனைத் துதிப்பதின் கருப்பொருளை மேன்மைப் படுத்தாமல், மனிதர்களின் உள்ளத்தை கவரும் காரியங்களிலே அதிக கவனத்தை செலுத்துகின்றார்கள். பிரியமானவர்களே, விழிப்புள்ளவர்களாய் இருங்கள். இடமும் பொருளும் தேவனை கவர்ந்து கொள்ளக் கூடுமோ? இவைகள் யாவும் இருந்தும் நம்முடைய இருதயம் கர்த்தருடைய நாமத்திற்குரிய மகிமையை செலுத்தாவிட்டால், நாம் செய்யும் எந்தக் காரியமும் தேவனுக்கு பிரியமாக இருக்கப் போவதில்லை. வாத்தியக் கருவிகள் உள்ளவர்கள் அவைகளை நேர்த்தியாக வாசியுங்கள். இல்லாதிருந்தால் உங்களிடம் இருப்பதைக் கொண்டு, ஆவியோடும் உண்மையோடும், பரித்த அலங்காரத்தோடும் தேவனைக்கேற்ற ஆராதனையை செய்யுங்கள்.

**சங்கீதம் 29:2**

பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள்.

**ஜெபம்:** தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நாமத்திற்குரிய மகிமையை உமக்குச் செலுத்தி, பரிசுத்த அலங்காரத்தோடு உமக்குப் பிரியமான ஆராதனைனை செய்ய உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரப்பலி

தாவீது ராஜா, துதிசெய்கிறதற்குத் தான் பண்ணுவித்த கீதவாத்தியங்களால் நாலாயிரம்பேர் கர்த்தரைத் துதிக்கிறவர்களாயிருக்கவேண்டும் என்று லேவியர்களின் வகுப்புகளின்படி அவர்களைவகுத்தான். மேலும் எக்காள தொனியோடே அவரைத் துதியுங்கள் வீணையோடும் சுரமண்டலத்தோடும் யாழோடும் தீங்குழலோடும், ஓசையுள்ள கைத்தாளங்களோடும், பேரோசையுள்ள கைத்தாளங்களோடும் கர்த்தரை துதியுங்கள் என்று பல சங்கீதங்களிலே எழுதியிருப்பதையும் நாம் காணாலாம். தேவனாகிய கர்த்தர் தாவீது ராஜாவின் ஆராதனையை அங்கீகரித்தார். அன்றைய நாட்களிலே, ஆட்டுக்கடாக்களையும், மிருகங்கள் பறவைகள், தானியங்களையும் தேவனுக்கு பலியாக மனிதர்கள் ஒப்புக்கொடுத்தார்கள். எருசலேம் தேவாலயத்தின் பிரதிஷ்டையின் போது, சாலொமோன் ராஜா திரளான பலிகளை கர்த்தருக்கு ஏறெடுத்தார். அந்நாளிலே ராஜாவின் இருதயமும், பலி கொடுத்த ஜனங்களின் இருதயங்களும் தேவனுக்கு ஏற்புடையதாக இருந்தது. காலங்கள் கடந்து சென்றதும், தீர்க்கதரிசிகளின் நாட்களிலே, உங்கள் பலிகளின் திரள் எனக்கு என்னத்துக்கு என்று கர்த்தர் கூறினார் (ஏசாயா 1:11). தேவனுக்கு பிரியமான ஆராதனையை செலுத்தி வந்த தாவீது ராஜாவும் தன் சங்கீதமொன்றிலே: பலியை நீர் விரும்புகிறதில்லை, விரும்பினால் செலுத்துவேன் தகனபலியும் உமக்குப் பிரியமானதல்ல. தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதானே. தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர் என்று தேவனுக்கு பிரியமான பலி எதுவென்பதையும் விளக்கிக் கூறியிருக்கின்றார். இன்று நாம் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலிகளை செலுத்துகின்றோம். நாம் திரளான ஜனங்களோடு கூடி, எண்ணற்ற ஸ்தோத்திரபலிகளை அவருக்கு ஏறெடுக்கலாம், ஆனால்நாம் ஏறெடுக்கும் ஆராதனை தேவனுக்குச் சுகந்த வாசனையாக இருக்க வேண்டுமென்றால், நம்முடைய வாயின் வார்த்தைகள் மட்டுமல்ல, நம்முடைய இருதயங்களின் தியானங்களும், தேவனுடைய பார்வையிலே ஏற்புடையதாக இருக்க வேண்டும். எனவே, இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரித்து, அதனால் தேவனை பிரியப்படுத்த முயற்சி செய்யாமல், தேவனுடைய வார்த்தைக்கு நம்மை நாம் அர்பணித்து வாழும் போது, நம்முடைய துதியிலே தேவன் பிரியப்படுவார்.

**சங்கீதம் 51:17**

**தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்.**

**ஜெபம்:** என் தேவனாகிய கர்த்தாவே, நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை என்று அறிந்த நாம், நிலையான நகரமாகிய பரலோகத்திற்கேற்ற துதியை ஏறெடுக்க எனக்கு கற்றுக் கொடுப்பீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# யாரை பிரியப்படுத்துகின்றேன்?

ஆகாப் என்னும் இஸ்ரவேலின் ராஜா, தனக்கு முன்னிருந்த எல்லாரைப்பார்க்கிலும் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான். அவன் பாகாலை சேவித்து அதைப் பணிந்துகொண்டு, அதற்கு கோவிலையும் பலிபீடத்தையும் கட்டி, ஒரு விக்கிரகத்தோப்பையும் வைத்திருந்தான். அவன் மனைவியாகிய யேசபேல் கர்த்தரின் தீர்க்கதரிசிகளில் அநேகரை கொலை செய்தாள். அந்நாட்களிலே, கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய எலியா, பாகாலின் தீர்க்கதரிசிகளோ நானூற்றைம்பது பேர் அவர்கள் முன்னிலையில் தனியாக நின்று, கர்த்தரே மெய்யான தெய்வம் என்று காண்பிக்கும்படிக்கு, பலிபீடத்தை செப்பனிட்டு தேவனுக்கு உகந்த பலியை ஏறெடுத்தான். கர்த்தர், தாம் ஒருவரே மெய்யான தேவன் என்று காண்பிக்கும் பொருட்டு, வானத்திலிந்து, ஜனங்கள் யாவரும் காணும்படி அக்கினியால் பதிலளித்தார்.

**கலாத்தியர் 1:10**

**இப்பொழுது நான் மனுஷரையா, தேவனையா, யாரை நாடிப் போதிக்கிறேன்?**

இன்று நாம் தேவனுக்கு உகந்த ஆராதனை செய்யும்படிக்கு, நம்முடைய இருதயங்கள் செப்பனிடப்பட வேண்டும். நம் இருதயங்கள் யாவும் தேவனுக்கு உகந்த வாசனையாக செப்பனிடப்பட்டிருந்தால், நாம் வெளியரங்கமாக செய்யும் செயற்பாடுகளும் தேவனுக்கு உகந்ததாக இருக்கும். தேவன் முகத்தையல்ல, இருதயத்தையே பார்க்கின்றார் என்று கூறிவிட்டு, நாம் செய்யும் வெளியரங்கமான கிரியைகளை மனிதர்களுடைய எண்ணப்படி நாம் செய்துவிட முடியாது. இன்று பலர், காவல்களிலும், முகாம்களிலும், தெருவோரங்களிலும், மரங்களின் நிழல்களிலுமிருந்து தேவனை ஆராதிக்கின்றார்கள். இதை அவர்கள் திட்டமிட்டு செய்யவில்லை, மாறாக, அவர்கள் அந்த நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றார்கள். ஆனால், இன்று பல ஆலயங்களிலே, தேவனை ஆராதிக்கும் இடங்கள் பலவிதாமாக அமைக்கப்பட்டு வருகின்றது. முன்பிருந்த தேவனுடைய வசனங்களும், சிலுவையின் சின்னமும் மேடைகளிலிருந்து அகற்றப்பட்டு, நவீன அலங்காரங்களால் அலங்கரிக்கப்படுகின்றது. இவைகளை ஏன் செய்கின்றார்கள்? தேவனை கவர்ந்து கொள்ளும்படியாகவா? அல்லது மனிதர்களை கவர்ந்து கொள்ளும்படியாகவா? பல மனிதர்களையும், இளந்த தலைமுறையினரையும் கவர்ந்து கொள்வதினால் அவை தேவனுக்கு பிரியமாக இருக்கக் கூடுமோ என்று ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். நாம் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவர்களாயிருந்தால், நாம் கிறிஸ்துவின் ஊழியர்களாக இருக்க முடியாது.

**ஜெபம்**: இருதயங்களை ஆராய்ந்தறிகின்ற தேவனே, என் வெளியரங்கமான கிரியைகளின் உள்ளான நோக்கமானது உமக்கு உகந்தனவைகளாக இருக்கும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஆதி நிலைக்குத் திரும்புங்கள்

புதிதாக திருமணம் செய்து கொண்ட தம்பதியினரின் வாழ்க்கை முறையை அவதானித்த பலர் அவர்கள் ஒருவர்மேல் ஒருவர் கொண்டுள்ள அன்பையும் ஐக்கியத்தையும் குறித்து மெச்சிக் கொண்டார்கள். காலங்கள் கடந்து செல்லும் போது, வாழ்க்கையிலே ஏற்பட்ட எதிர்பாராத நிகழ்வுகள் அவர்களுடைய ஐக்கியத்தை தளரச் செய்தது. அதன் அடிப்படை காரணத்தை அறிந்து அதை சரி செய்து கொள்வதற்கு பதிலாக, பல மாற்று வழிகளை அவர்கள் செய்ய ஆரம்பித்தார்கள். இருவரும் அதிக நேரம் வேலை செய்ய ஆரம்பித்ததால், இருவரும் ஒருவரை ஒருவர் சந்திக்கும் நேரத்தை குறைத்துக் கொண்டார்கள். விடுமுறை நாட்களிலே நண்பர்களோடு சேர்ந்து உல்லாசப் பயணங்கள் செய்வதால், அவர்களுக்கிடையே வாக்குவாதங்கள் செய்வதற்கு சந்தர்ப்பங்கள் இல்லாதிருந்தது. தங்கள் வாழ்வின் அஸ்திபாரத்தை உறுதிப்படுத்தும் வழிகளுக்கு திரும்பாமல், தாங்கள் இன்னும் தம்பதிகள் என்று காட்டிக் கொள்வதற்காகவே பல பக்க வழிமுறைகளை ஏற்படுத்தியிருந்தார்கள். இவர்களது முடிவு எப்படியாக இருக்கும்? பிரியமானவர்களே, தேவனோடு நாம் கொண்டுள்ள உறவு ஆதியிலிருந்தது போல இப்போதும் எப்போதும் இருக்க வேண்டும். அதாவது ஆண்டவராகிய இயேசுவை நம்முடைய சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்ட நாளிலே, நாம் எப்படியாக அவரிலே நிலைத்திருந்தோமோ, அப்படியாகவே நாம் எப்போதும் அவரில் நிலைத்திருக்க வேண்டும். நாம் பரலோகத்திலிருந்து ஈவாக பெற்றுக் கொண்ட தேவனுடைய ஆவியானவரே நம்மை சகல சத்தியத்திலும் நடத்தி, தேவனை அறிகின்ற அறிவிலே நம்மை வளரச் செய்கின்றார். அந்த வழிநடத்துதலை தேவ பிள்ளைகள் தள்ளிவிடும் போது, ஆதி அன்பிலிருந்து அவர்கள் விழுந்து விடுகின்றார்கள். தாங்கள் விழுந்த இடத்திலிருந்து எழும்புவதற்குப் பதிலாக, தாங்கள் விழுந்த நிலையிலே இருந்து கொண்டு, தாங்கள் தேவ பிள்ளைகள் என்று காண்பிக்கும் பொருட்டு துதி ஆராதனை முறைமைகளையும், பிரசங்க முறைமைகளையும், ஆலய அலங்காரங்களையும் மாற்றி, சுயாதீனம் என்ற போர்வையிலே பரிசுத்த குலைச்சலுக்கும் இடங் கொடுத்து, அவைகளினாலே மனிதர்களை கவர்ந்து கொள்ள முயற்சி செய்கின்றார்கள். நீங்களோ, அப்படியிராமல், ஆவியானவரின் சத்தத்திற்கு கீழ்ப்படிந்திருங்கள்.

**வெளிப்படுத்தல் 2:5**

**நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக**

**ஜெபம்**: சகலமும் அறிந்த தேவனே, ஆரம்பத்திலே நான் உம்மோடு கொண்டிருந்த உறவிற்கு திரும்புவதற்குப் பதிலாக, மாற்று வழிமுறைகளை நான் கை கொள்ளாதபடிக்கு, எப்போதும் ஆவியானவரின் வழிநடத்துதலின்படி வாழ கிருபை செய்யும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# என்னுடைய வீடு ஜெப வீடு

ஒரு சமயம், யூதருடைய பஸ்காபண்டிகை சமீபமாயிருந்தது. அப்பொழுது இயேசு எருசலேமுக்குப் போய், தேவாலயத்திலே ஆடுகள் மாடுகள், புறாக்களாகிய இவைகளை விற்கிறவர்களையும், காசுக்காரர் உட்கார்ந்திருக்கிறதையும் கண்டு, கயிற்றினால் ஒரு சவுக்கையுண்டு பண்ணி, அவர்கள் யாவரையும், ஆடுமாடுகளையும் தேவாலயத்துக்குப் புறம்பே துரத்திவிட்டு, காசுக்காரருடைய காசுகளைக் கொட்டி, பலகைகளைக் கவிழ்த்துப்போட்டு, புறா விற்கிறவர்களை நோக்கி: இவைகளை இவ்விடத்திலிருந்து எடுத்துக்கொண்டு போங்கள்; என் பிதாவின் வீட்டை வியாபார வீடாக்காதிருங்கள் என்றார். தேவனுடையஆலயம் எதற்காக அமைக்கப்பட்டிருக்கின்றது? நாம் ஏன் அங்கேசெல்கின்றோம் என்பதைக் குறித்து நாம் எப்போதும் விழிப்புள்ளவர்களாக இருக்க வேண்டும். தேவ பிள்ளைகள் ஒருமனப்பட்டுக் கூடிவரும் ஸ்தானத்திலே தேவனுடைய பிரசன்னம் இருக்கும். அங்கே பயபக்தியோடு கூடிய தேவ பயம் இருக்கும். அந்த இடத்திலே தேவனாகிய கர்த்தருடைய நாமம் மகிமைப் படும். அந்த வேளையிலே தேவ பிள்ளைகளுடைய வாழ்க்கையிலே தேவனுக்கு பிரியமான மாறுதல்கள் உண்டாகும். அந்த இடத்திலே மனிதர்களுடைய விருப்பங்கள் அல்ல, அங்கு வரும் விருந்தாளிகளுடைய திட்டம் அல்ல. சர்வ வல்லமையுள்ள தேவனுடைய விருப்பமும், உன்னதமான தேவனுடைய திட்டமும் இருக்கும். இவைகளோடு தங்கள் சுய ஆதாயத்திற்காக, தங்கள் சுய திட்டங்களுக்காக, தங்கள் மன விருப்பங்களுக்காக காரியங்களை நடப்பிக்கின்றவர்கள், தேவனுடைய ஆலயத்தை கள்ளர் குகையாக மாற்றுகின்றார்கள். வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்றும், வேதவாக்கியம் சொல்லுகிறபடி தேவனுடைய ஊழியத்தை நடப்பிக்கின்றவன் தன் வாழ்வாதாரத்திற்குரிய கூலியை பெறுகின்றான். அது சுய ஆதாயம் அல்ல. ஆனால் தேவன் குறித்த எல்லையை மீறி, தேவ ஆராதனைகள் நடக்கும் இடங்களை சொந்த நோக்கங்களை நிறைவேற்றும் இடமாக மாற்றி, தேவனுடைய காரியங்களோடு இந்த உலகத்திற்குரிய காரியங்களை இணைத்துக் கொள்ளக்கூடாது. சிலர் தங்கள் வியாபார தொடர்புகளை ஏற்படுத்தும்படிக்கும், தங்கள் பிள்ளைகளின் திருமணத்திற்காகவும், தங்கள் இன்ப துன்ப நாளிலே தங்களுக்கு ஒரு போதகர் தேவை என்பதற்காகவும் ஆலயத்திற்கு செல்கின்றார்கள். எந்த நோக்கத்திற்காக ஒருவன் ஆலயத்திற்கு செல்கின்றானோ, அவன் இருதயமும் அதையே நோக்கிக் கொண்டிருக்கும்..

**மத்தேயு 21:13**

**என்னுடைய வீடு ஜெப வீடு என்னப்படும் என்று எழுதியிருக்கிறது;**

**ஜெபம்**: உள்ளத்தின் நினைவுகளை அறிந்த தேவனே, நித்திய ஜீவனுக்கென்று நீர் நியமித்த ஒழுங்குகளை நான் சொந்த நோக்கங்களை நிறைவேற்ற பயன்படுத்தாதபடிக்கு என்னைக் காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நீதிக்குரிய ஆயுதங்கள்

நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனை தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. நீங்களே அந்த ஆலயம். அதை நாம் சுயநீதி, சுயஇச்சை நிறைவேற்றுவதற்கும், சுய நலத்திற்காகவும், சுய இலாபத்திற்காகவும் பயன்படுத்தினால், அது தேவனுடைய வீடாக இருக்குமோ? அல்லது கள்வர் குகையாக இருக்குமோ? என்பதை குறித்து நீங்கள் சிந்தனை செய்யுங்கள். நமது மாம்சமானது நம்மில் தேவநீதி நிறைவேறுவதற்கு எதிராகவே இச்சிக்கின்றது. மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றனஅவையாவன: விபச்சாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே. இப்படிப்பட்டவைகளுக்கு ஒருவன் தன் இருதயத்திலே இடங்கொடுத்துக் கொண்டு, நான் தினமும் ஜெபிப்பவன் என்று கூறுபவனாக இருப்பானானால் அந்த ஜெபம் தேவனுக்கு பிரியமானதாய் இருக்க மாட்டாது. தன் இருதயத்தை கள்வர் குகையாக வைத்திருப்பதற்கு இடங் கொடுப்பவன், எந்த சபை ஐக்கியத்திற்குச் செல்லும் போதும், அவன் வழியாக தேவனுக்குப் பிரியமில்லாத காரியங்கள் நடப்பிப்பதற்கு அவன் ஒரு ஊடகமாக தன்னை ஒப்புக் கொடுகின்றான். அப்படிப்பட்டவன், தன் கிரியைகளை நியாயப்படுத்த முயற்ச்சி செய்வதால், அவனைப் போல சிந்திக்கின்றவர்கள், அவனோடு இணைந்து, சபை ஐக்கியத்திலே பிரிவினைகளை ஏற்படுத்திக் கொள்வார்கள். பிரியமானவர்களே, நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று, தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே. எனவே பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்களை தேவனுக்கு ஒப்புக் கொடுங்கள்.

**ரோமர் 6:13**

**உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்.**

**ஜெபம்**: உன்னதமான தேவனே, என்னுடைய உள்ளம் நீர் தங்கும் ஆலயம் என்ற உணர்வு என்னில் பெருகவும், என் உள்ளத்தை நான் கள்வர் குகையாக மாற்றாதபடிக்கும் என்னை காத்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கெம்பீரமான அறுவடை

அந்தந்த நாளுக்கு அதினதின் பாடுகள் போதும் என்ற பிரகாரமாக அவனது வாழ்க்கை படகில் அலைகள் மோதிக் கொண்டே இருந்தது. காலநிலையோ அவனுக்கு சாதகமாகத் தெரியவில்லை. இளமைக் காலத்தில் இருந்தது போல பெலமிக்க உடல்நிலை இல்லை. ஆனாலும் அவைகள் யாவற்றின் மத்தியிலும், அந்த விவசாயியானவன், தன் கலப்பையை எடுத்துக் கொண்டு வயல் உழுது பண்படுத்திக் கொண்டிருந்தான். குறித்த காலத்திற்குள் எப்படியாவது நிலத்தை பண்படுத்தி, விதைகள் விதைக்க வேண்டும் என்று பல கஷ்டங்கள் மத்தியிலும் அயராது உழைத்தான். அவனைச் சூழ்ந்திருந்த நெருக்கங்கள் அவன் விதைகளை விதைப்பதற்கு தடையாக இருக்கவில்லை. குறித்த காலத்திலே மழைபெய்யும் என்ற நம்பிக்கையோடு அவன் பிரயாசப்பட்டான். ஆனாலும் காலம் நிறைவேறியபோது, தான் அறுத்த அரிகளைச் சுமந்து கொண்டு கெம்பீரத்தோடே திரும்பி வந்தான். பிரியமானவர்களே, கண்ணீரோடு விதைக்கின்றவர்கள் கெம்பீரத்தோடே அறுக்கின்றார்கள். எனவே, வாழ்வின் எந்த நெருக்கங்களும் நாம் விதைகளை விதைப்பதற்கு நமக்கு தடையாக இருக்கக்கூடாது. அதாவது, நமக்கிருக்கும் பலத்தின்படி நாம் சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளை நடப்பிக்க வேண்டும். பாடுகளும் நெருக்கங்களும் நம் வாழ்க்கையை சூழ்ந்து கொள்ளும் போது, நாம் முன்னெடுக்கும் நற்செயற்திட்டங்களை குறித்த சோர்வு மனதிலே உண்டாகும். “இத்தனை காலமாக எத்தனையோ நன்மைகளை செய்தேனே, என்னத்தைக் கண்டேன்” என்ற சத்தங்கள் நமது மனதிலே தொனிக்கும். நாம் செய்யும் நற்கிரிகளானது அற்பமானதும் பிரயோஜனமற்றதும் என்று சிந்திக்கத் தூண்டும். எப்படியாக சிறிய விதையானது முளைத்து, பெரும் விருட்சமாகி, பல மக்களுக்கு சுவையான கனிகளைக் கொடுக்கும் மரமாகவும், வெயிலுக்கு ஒதுங்கும் நிழலாகவும் இருப்பது போல, நீங்கள் மனதார செய்யும் சிறிய நற்கிரியைகள், அதன் காலத்தில் பெரிதான பலனைக் கொடுக்கும். எந்த காலமாக இருந்தாலும், மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான். எனவே நீங்கள், நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருங்கள். நீங்கள் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அதில் பலனை அறுப்பீர்கள்.

**சங்கீதம் 126:5**

கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள்.

**ஜெபம்**: நற்கிரியைகளை ச் செய்ய பெலன் தரும் தேவனே, நெருக்கங்கள் மத்தியிலும் சோர்ந்து போகாமல் நற்கிரியைகளை செய்யும்படிக்கு என்னை பெலப்படுத்தி வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உங்களுக்கு ஆறுதல் உண்டு

ஒரு மனிதனானவன், தன் உறவினனொருவனுக்கு ஆபத்துக் காலத்திலே எதிர்பார்ப்பு ஏதும் இல்லாமல் நன்மை செய்தான். காலங்கள் கடந்து சென்றபோது, அந்த மனிதன் செய்த நன்மையை மறந்து, அந்த உறவினன், நன்மைக்கு பதிலாகத் தீமை செய்தான். இப்படிப்பட்ட சூழ்நிலையிலே, இந்த உலகத்தின் வழக்கப்படி அந்த மனிதனானவன் செய்யக்கூடிய நியாயமான காரியங்கள் என்ன? அந்த உறவினனோடே வாக்குவாதம் கொள்ளலாம். அவனை அவமானப்படுத்தும் வார்த்தைகளைப் பேசலாம். பலர் முன்னிலையிலே நியாயம் கேட்கலாம். இந்த உலகிலுள்ளவர்கள் அதை ஏற்றுக் கொள்வார்கள். அதைவிட மேலாக ஆண்டவர் இயேசுவின் கரத்திலே யாவற்றையும் ஒப்புக் கொடுத்து விட்டு, கிறிஸ்துவின் நிமித்தம் அந்த கசப்பான அனுபவத்தை சகித்துக் கொண்டிருக்கலாம். நற்கிரியைகளை செய்வதில் சோர்ந்து போகாதிருங்கள் என்று கூறும் போது, பொதுவாக, ஏழை எளியவர்களுக்கு உதவ வேண்டும் என்பதே முதலாவதாக மனிதர்களின் மனதிலே தோன்றும் எண்ணமாக இருக்கின்றது. அனுதின பாடுகளின் மத்தியிலும் ஏழை எளியவர்களுக்கு நாம் இரக்கம் காண்பிப்பது மிகவும் அவசியமானது. ஆனால் அதுமட்டும் நற்கிரியை அல்ல. பிரியமானவர்களே, நாம் கிறிஸ்துவின் பொருட்டு நெருக்கப்படும் போது, பாடுகளை சகித்துக் கொண்டால், அது தேவனுடைய பார்வையிலே பெரிதான, நற்கிரியையாக இருக்கின்றது. இந்த உலகத்திலே உங்களுக்கு உபத்திரவங்கள் உண்டு ஆனாலும் திடன் கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன் என்று நம்முடைய ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். உலகத்திலே ஆண்டவர் இயேசு, தமக்கு உண்டான உபத்திரவங்களை எப்படியாக மேற் கொண்டார்? என்னுடைய சித்தப்படி அல்ல, உம்முடைய சித்தப்படி எனக்கு ஆகட்டும் என்று தன் பிதாவாகிய தேவனுக்கு தன்னை உகந்த பலியாக ஒப்புக் கொடுத்தார். தன்னைத் துன்பப்படுத்துகின்ற மனிதர்களை தண்டிக்கும்படியாக பிதாவை வேண்டிக் கொள்ளாமல், பிதாவே இவர்களை மன்னியும் என்று அவர்களின் அறியாமைக்காக பிதாவிடம் ஜெபம் செய்தார். துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் ஆறுதலடைவார்கள். பிரியமானர்களே, கண்ணீரின் மத்தியிலும் உபத்திரவங்கள் மத்தியிலும் நன்மை செய்யுங்கள். ஈடு இணையில்லாத மகிமை இதனால் உங்களுக்கு உண்டு.

**1 பேதுரு 4:14**

**நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள்;**

**ஜெபம்:** துயரப்படுகின்றவர்கள் ஆறுதலடைவார்கள் என்று சொன்ன தேவனே, நான் தீமைக்குத் தீமை செய்யாமல், நன்மை செய்து பாடனுபவிப்பதையே தெரிந்து கொள்ளும்படி என்னை உணர்வுள்ளவனாக்கும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இரக்கத்தை காண்பியுங்கள்

ஒரு கிராமத்திலே, வாழ்ந்து வந்த வாலிபனொருவன், தன் குடும்ப கஷ்டத்தின் மத்தியில், பிழைப்பதற்கு வழி தெரியாமல், ஒரு கடையிலே களவு செய்யும் போது கையும் மெய்யுமாக அகப்பட்டுக் கொண்டான். இதனிமித்தம் அந்த கிராமத்தை சேர்ந்த சிலர் அவனை பிடித்து கட்டி வைத்து அடித்தார்கள். அந்தக் காட்சியை கண்ட, அவ்வழியாக வந்த ஒரு வயதான ஓய்வு பெற்ற ஆசிரியரொருவர், அந்த வாலிபன்மேல் பரிதாபப்பட்டு, அவனை அடிப்பவர்களை நோக்கி: பிள்ளைகளே, அவனை அடிக்காதேயுங்கள். என்னிமித்தம் அவனை விட்டுவிடுங்கள். அவனுக்கு இன்னுமொரு சந்தர்ப்பத்தைக் கொடுங்கள். அவன் செய்த களவுக்குரிய கிரயத்தை கொடுப்பதற்கு என்னிடத்தில் பணமில்லை, ஆனால் அந்த அளவிற்குதக்கதாக நான் உங்களுக்கு வேலை செய்கின்றேன் என்று தயவாக கேட்டுக் கொண்டார். அந்த கிராமத்திலுள்ளவர்கள்: ஐயா, நீங்கள் எல்லாம் எதற்கு இந்த திருந்தாத கள்வனுக்காக இப்படியெல்லெலாம் பேசுகின்றீர்கள் என்று கூறி அந்த ஆசிரியருக்கு இருந்த நன்மதிப்பினிமித்தம் அந்த வாலிபனை விட்டு விட்டார்கள். அந்த ஆசிரியர் கண்ணீர் நிறைந்த கண்களுடன் அந்த வாலிபனை நோக்கி: மகனே, ஏன் உன் வாலிப நாட்களை வீணாக்குகின்றாய். உழைப்பதற்கு எத்தனையோ வழிகள் உண்டே என்று கூறினார். அந்த ஊரைவிட்டு சென்ற வாலிபனின் மனதிலே அந்த ஆசிரியரின் கண்ணீர் நிறைந்த கண்களின் காட்சி வந்து கொண்டே இருந்தது. அந்த ஆசிரியர் ஏன் எனக்காக கண்ணீர்விட்டார் என்ற கேள்வி அவன் வாழ்க்கையிலே அவனது இருதயத்திலுள்ள பெரிதான மாற்றத்தை உண்டாக்கியது. அவன் தான் உழைத்து முன்னேற வேண்டும் என்று கடும் பிரயாசப்பட்டு, நல்வாழ்வை தெரிந்து கொண்டான். பிரியமானவர்களே, பணம் மற்றும் சரீர உதவிகள் மட்டுமல்ல, மெய்யான அன்போடு கூடிய உங்கள் வார்த்தைகளும் சில மனிதர்களின் வாழ்க்கையை நன்மையானதாக மாற்றும். ஒருவேளை அப்படி மாற்றவிட்டாலும், உங்கள் இரக்கமுள்ள மனதைக் காணும் பரம பிதா உங்கள் வழியாக மகிமைப்படுவார். குற்றம் செய்தவர்கள் மட்டுமல்ல, உங்கள் நல்ல மனதை காணும் அயலவர்களும அந்நியர்களும் உங்களைப் போல தாங்களும் மாற வேண்டும் என்ற எண்ணமுடையவர்களாக மாறிவிடுவார்கள். நீங்கள் பரம பிதாவிற்கு பிள்ளைகள் என்பதை மறந்து போய் விடாதிருங்கள். அவர் இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராக இருப்பதுபோல, நீங்களும் உங்கள் இரக்கத்தைக் காண்பியுங்கள்.

**மத்தேயு 5:7**

இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.

**ஜெபம்:** மிகுந்த காருண்யமுள்ள தேவனே, உம்முடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அதுபோலவே நானும் மற்றவர்களின் நெருக்கத்தில் இரக்கத்தை காண்பிக்கும் பொருட்டு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஏற்றகாலம்வரை பொறுமையாயிருங்கள்

ஒரு நாட்டை அரசாண்டு வந்த ராஜாவிற்கு ஒரு குமாரன் இருந்தான். அந்தக் குமாரன் இளவரசனாகவும், ஒருநாள் தன் தந்தைக்கு பின்னர் ராஜாவாகவும் முடி சூடப்படுபவனாகவும்இருந்ததால், அவனுடைய மெய்ப்பாதுகாவலர்கள் கண்ணும் கருத்துமாக அவனைப் பாதுகாத்து வந்தார்கள். அவன் வாலிப பிராயத்தை அடைந்ததும், அனுதினமும் தான் செல்லும் இடமெல்லாம் போர்ச்சேவகர் தன் பின்னே வருவதையும், தன்னை சுற்றியிருக்கும் பலத்த பாதுகாப்பு அரண்களையும், ராஜகுமாரனாக இருந்தும் தனக்கு இருக்கும் கட்டுப்பாடுகளையும் குறித்து சலிப்படைந்து கொண்டான். என் வாழ்வில் எனக்கு சுதந்திரம் இல்லை, நான் இப்போது வளர்ந்துவிட்டேன், என்னை நான் பாதுகாத்துக் கொள்வேன் என்று எண்ணி, தன்னை சூழவுள்ள மெய்காவலர்கள் தன்னை காணாதபடிக்கு மாறு வேடம் பூண்டு, தன் பாதுகாப்பு வலயத்தைவிட்டு சற்று தொலைவிலுள்ள ஊரொன்றுக்குள் சென்றுவிட்டான். அந்த நாளை எதிர்பார்த்துக் கொண்டிருந்த எதிராளிகள் அவனை இலகுவாக பிடித்துக் கொள்ளும்படிக்கு கூட்டமாக அவனை சூழ்ந்து கொண்டார்கள். பிரியமானவர்களே, ஆக்கினைக்கு நியமிக்கப்பட்டிருந்த நம்மிடத்தில் அன்புகூர்ந்த ஆண்டவராகிய இயேசு, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கியிருக்கின்றார். நம்முடைய ராஜ்யம் இந்த பூமிக்குரியதல்ல. வரவிருக்கும் பரலோகத்தை நாடி நாம் யாத்திரிகளாக கடந்து செல்கின்றோம். அந்த நிலையான ராஜ்யத்தில், நமக்கு ஜீவகிரீடம் சூடும்வரைக்கும், இந்த பூமியிலே கொஞ்சக் காலம் தரித்திருக்கின்றோம். நம்மை மறுபடியும் கீழ்படியாமையின் பிள்ளைகளாக்கி ஆக்கினைக்கு உட்படுத்தும்படிக்கு இரவும் பகலும் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல சுற்றித் திரிகின்றான். எனவே, கர்த்தர் தந்திருக்கும் வேதத்தின் பாதுகாப்பு வலயத்திற்குள் பொறுமையோடு தரித்திருங்கள். வாழ்வில் சுதந்திரம் வேண்டும் என்று தேவன் ஏற்படுத்தியிருக்கும் பாதுகாப்பை உடைத்துப் போடாதி ருங்கள். நான் பெலமுள்ளவன், நான் என்னை பாதுகாத்துக் கொள்வேன் என்று உங்களது சுயபுத்தியின்மேல் சாராமல், ஏற்றகாலத்தில் கர்த்தர் உங்களைஉயர்த்தும்வரை அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.

**1 பேதுரு 5:6**

ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.

**ஜெபம்**: சர்வ வல்லமையுள்ள தேவனே, நீர் என் வாழ்வில் ஏற்படுத்தியிருக்கும் ஒழுங்கு முறைகளை நான் என் சுய இஷ்டப்படி உடைத்துப் போடாதபடிக்கு பொறுமையுள்ள இருதயத்தை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஆலோசனை கூறுபவர்கள்

தேசத்தின் கடைமுனையிலுள்ள, கிராமத்திலே, குடிப்பதற்கு நல்ல தண்ணீர் இல்லாதிருந்தது. அந்த கிராமத்திற்கு, அதன் அருகிலுள்ள ஊரிலிருந்து குடி நீரானது (Water Bowser) வாகனத்தில் கொண்டு செல்லப்பட்டது. அந்தக் கிராமத்திற்கும், தண்ணீர் விநியோகிக்கும் ஊருக்கும் இடையில் ஒரே ஒரு பாலம் இருந்தது. அந்தக் கிராமத்தை எப்படியாவது கைப்பற்ற வேண்டும் என்று அதற்கு எதிராக செயற்பட்டு வந்த எதிரிகள் சிலர், அந்தப் பாலத்தை உடைத்துப் போடும்படிக்கு வகை தேடித் திரிந்தார்கள். அதனால், அந்த கிராமத்தின் மூப்பர்களுக்கும், அருகிலுள்ள ஊரின் நகர சபையினருக்குமிடையிலுள்ள நன்மதிப்பை தந்திரமாக உடைத்துப் போடுவதற்கு, கிராமத்தின் ஜனங்கள் எதிரிகளின் வஞ்சகமான சூழ்ச்சிக்கு இடங் கொடுத்தார்கள். அதனால், அந்தக் கிராமத்தினர் தங்கள் ஆதரவுகோலை தாங்களே உடைத்துப் போட்டார்கள். பிரியமானவர்களே, இந்தப் பிரகாரமாகவே, வஞ்சனையானது, சபை ஐக்கியங்களுக்குள் உட்பிரவேசிப்பதற்கு சிலர் தந்திரமாக இடங் கொடுக்கின்றார்கள். தங்களுக்கு நன்மையென கருதி, ஆதரவாக இருந்து, தேவனுடைய வசனத்தை கலப்பில்லாமல் பேசுகின்ற சகோதரர்களுடனான நல்லுறவுகளை துண்டித்து விடுகின்றார்கள். இவர்கள் எப்போதும் கண்டித்துப் பேசுகின்றவர்கள் என்று தமக்கேயுரித்தான தேவ ஆலோசனையின் பாலங்களை உடைத்துப் போடுகின்றார்கள். இவ்வண்ணமாகவே, இஸ்ரவேலின் ராஜாக்களில் ஒருவன், யுத்தத்திற்கு போகும் முன்பு, கர்த்தரிடத்தில் விசாரிக்கும் உண்மையான தீர்க்கதரியாகிய மிகாயாவிடம் தேவ வார்த்தையை கேட்க மனதில்லாதிருந்தான். ஏனெனில் மிகாயா, தனக்கு தன்னைக் குறித்து நன்மையாக அல்ல, தீமையாகவே தீர்க்கதரிசனஞ்சொல்லுகிறவன் என்று, அவன் உண்மையுள்ள தேவ ஊழியனை பகைத்து, தான் விரும்பியதைப் பேசும் பொய்யான 400 தீர்க்கதரிகளை பின்பற்றி, யுத்தத்திலே மரித்துப் போனான். பிரியமானவர்களே, உங்களுக்கு தேவ ஆலோசனை கூறுபவர்களின் தொடர்புகளை துண்டித்துப் போடாதிருங்கள். உங்களை நடத்துகிறவர்கள், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச்செய்யும்படி, அவர்களுக்கு நீங்கள் கீழ்ப்படிந்து அடங்குங்கள். அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே.

**நீதிமொழிகள் 11:14**

**ஆலோசனையில்லாத இடத்தில் ஜனங்கள் விழுந்து போவார்கள்;அநேக ஆலோசனைக்காரர் உண்டானால் சுகம் உண்டாகும்.**

**ஜெபம்:** ஆலோசனை தரும் தேவனே, நீர் என் வாழ்வில் ஈவாக தந்திருக்கும் ஆலோசகர்களின் நல்லுறவுகளை உடைத்துப் போடாதபடிக்கு, பிரகாசமுள்ள மனக் கண்களை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உம்முடைய ஆலோசனைகளின் வழிகள்

**நீதிமொழிகள் 15:22**

ஆலோசனையில்லாமையால் எண்ணங்கள் சித்தியாமற்போம்; ஆலோசனைக்காரர்அநேகர் இருந்தால் அவைகள் உறுதிப்படும்.

ஒரு மனிதனானவன், வியாபாரம் ஒன்றை ஆரம்பிக்கும்படி தன்னிலே தீர்மானம் செய்து கொண்டு, அதற்குரிய ஆயத்தங்கள் யாவையும் செய்து முடித்தான். அவன் வழமையாக செய்வது போல, தனக்கு ஆலோசனை கூறும் தேவ பயமுள்ள தன்னுடைய நல்ல நண்பனிடம் எதையும் கூறாமல், வியாபாரம் ஆரம்பிப்தற்குரிய நாளும் நியமிக்கப்பட்டபின்பே அதை தன் நண்பனிடம் அறிவித்தான். ஏனெனில், தன் நண்பன் ஒருவேளை தன் திட்டத்திற்கு எதிராக அறிவுரை கூறிவிடுவான் என்ற பயம் அவனிடத்தில் இருந்தது. ஆதலால் நான் நினைத் திருக்கும் வியாபாரத்தை ஆரம்பிக்க முடியாது என்று எண்ணியிருந்தான். வியாபாரம் ஆரம்பிக்கபட்டபின்பு, யாவும் நன்றாக இருக்கும் போது, அவனுடைய நண்பன் ஒருநாள் வியாபாரம் ஆரம்பித்தவனை சந்தித்து, நண்பா: நீ மிகவும் இளைப்படைந்து இருப்பதைப் போல ஒரு சொற்பனம் கண்டேன். உன்னுடைய புதிய வியாபாரத்தை குறித்து எச்சரிக்கையாயிரு. உன் ஆரோக்கியத்தையும், உன் குடும்பத்தின் சமாதானத்தையும் இழந்து போய்விடாதபடிக்கு எச்சரிக்கையாயிரு என்று கூறினான். அதைக் கேட்ட அந்த மனிதனானவன் மனதிலே எரிச்சலடைந்தான். பல ஆண்டுகள் கடந்து சென்றபின்பு, அந்த நண்பன் கூறிய பிரகாரமாகவே அவனுக்கு சம்பவித்தது, ஆனால் அவன் முன்னெச்சரித்தபடியினால், பொருள் சேதம் மட்டும் ஏற்பட்டது, அவன் தன் உடல் ஆரோக்கியத்தையும், குடும்ப சமாதானத்தையும் காத்துக் கொண்டான். பிரியமானவர்களே, இவ்வண்ணமாகவே, இன்று பலர் தங்களது வாழ்வில் முக்கிய தீர்மானங்களை எடுக்க, முன்பு தங்களுக்கு நல்ல ஆலோசனை கூறிவந்தவர்களை தங்கள் திட்டத்திற்கு புறம்பாக்கி விடுகின்றார்கள். “நான் அவர்களிடம் கேட்டால் நான் செல்லவிருக்கும் நீண்ட பிரயாணத்தை நான் நினைத்தபடி செய்ய முடியாது” “அவரிடம் அறிவுரை கேட்டால், இந்த திருமணத்தை செய்து கொள்ள முடியாது” என்று திட்டமிட்டு தங்கள் வாழ்வில் பிழையான தீர்மானங்களை எடுத்துக் கொள்கின்றார்கள். இதனால் நீண்ட கால எதிரடையான பின் விளைவுகளுடனான தங்கள் வாழ்க்கையை வாழ்கின்றார்கள். எனவே வாழ்வில் தீர்மானங்களை எடுக்கு முன்பு, தேவன் கொடுத்திருக்கும் ஆலோசனைகளை தள்ளிப் போடாதிருங்கள்.

**ஜெபம்**: நான் உனக்கு போதித்து நீ நடக்கும் பாதையை காட்டுவேன் என்று சொன்ன தேவனே, உம்முடைய போதனைக்கு நீர் நியமித்திருக்கும் ஒழுங்குகளை நான் தள்ளிப்போடதபடிக்கு என்னை காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பெருமைக்கு இடங்கொடாதிருங்கள்

தேவன்தாமே, தம்முடைய ஜனங்களை வழிடத்தும்படி மோசே என்னும் மிகுந்த சாந்த குணமுள்ள மனிதனை தெரிந்து கொண்டார். அவனுக்கு மிரியாம் என்னும் மூத்த சகோதரியும், ஆரோன் என்னும் மூத்த சகோதரனும் இருந்தார்கள். அவர்களில் ஆரோன் ஆசாரிய ஊழியத்திற்கு என்று பிரித்தெடுக்கப்பட்டான். சகோதரியாகிய மிரியாம் தேவனுடைய தீர்க்கதரிசியாக இருந்தாள். இவர்கள் தேவனோடு இடைப்படுகின்றவர்களும், ஜனங்களை தேவனிடம் சேரப்பவர்களுமாக இருந்தார்கள். ஆனால் மோசேயோ இஸ்ரவேல் ஜனங்களுக்கும், இவர்களுக்கும் தலைவனாக தேவனாலே அபிஷேகம் பண்ணப்பட்டிருந்தான். ஒரு சமயம், ஆரோனும், மிரியாமும் "மோசேக்கு விரோதமாய்ப் பேசி: கர்த்தர் மோசேயைக் கொண்டுமாத்திரம் பேசினாரோ, எங்களைக்கொண்டும் அவர் பேசினதில்லையோ" என்றார்கள். இதனால் கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் மூண்டது. இன்றைய நாட்களிலும்,சபைகளிலே வேதத்தை நன்கு அறிந்தவர்களும், தேவனுக்கு பிரியமான துதி ஆராதனை செய்கின்றவர்களும், ஜெபிக்கின்றவர்களும் இருக்கின்றார்கள். ஆனால், அவர்கள் யாவருக்கும் தேவன் அபிஷேகம் பண்ணப்பட்ட ஒரு மேய்ப்பன் இருக்கின்றார். சில வேளைகளிலே, பல காரணங்களுக்காக, தேவ ஆலோசனையை மேய்ப்பனிடமோ அல்லது நியமிக்கப்பட்டவர்களிடமோ கேளாமல், தேவன் எங்களோடும் பேசுகின்றவர், நாங்களும் அனுதினமும் ஜெபிக்கின்றோம், எங்களுக்கும் வேதம் தெரியும் என்று ஆலோசனைகளை தள்ளிவிட்டு ஒருசிலர் தங்கள் முடிவுகளை தாங்களே எடுத்துக் கொள்கின்றார்கள். ஒருவன் "நான் வேதத்தை அறிந்தவன், நான் ஜெபிப்பவன், நான் தேவனோடு பேசுபவன்" என்று தன்னைக் குறித்து தானே மேன்மைபாரட்டும் போதே, அவன் தேவனுடைய வார்த்தைக்கு மேலாக தன்னை உயர்த்துகின்றான் என்பதை அறிந்து கொள்ளலாம். கர்த்தர் மோசேயை அழைத்து, நீ எகிப்துக்குப் போ என்று கூறிய போது, அவன் தன்னைத் தாழ்த்தி, தன் இக்கட்டு காலத்திலே தனக்கு வீட்டைத் திறந்த தன் மாமனாரிடத்திற்குச் சென்று உத்தரவு பெற்றுக் கொண்டான். அந்த குணயியல்பு அவனுடைய மனத்தாழ்மையையும், கீழ்படிவையும், நன்றியறிதலையும் காண்பிக்கின்றது. பிரியமானவர்களே, தேவ ஆலோசனைகளை தள்ளிவிடாதிருங்கள். ஒரு வேளை தேவன் உங்களோடு பேசினால், மோசேயைப் போல உங்களைத் தாழ்த்துங்கள்.

**எண்ணாகமம் 12:2**

கர்த்தர் மோசேயைக்கொண்டுமாத்திரம் பேசினாரோ, எங்களைக் கொண்டும் அவர் பேசினதில்லையோ என்றார்கள்.

**ஜெபம்:** என் உள்ளத்தின் நினைவுகளை அறிந்த தேவனே, உம்முடைய வழிகளுக்கு எதிராக நான் மனமேட்டிமை கொள்ளாதபடிக்கு, நீர் குறித்த வழியிலே நான் கீழ்ப்படிந்து நடக்க எனக்கு கற்றுத் தருவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சுதந்திரமும் பாதுகாப்பும்

ஒரு ஐசுவரியவானின் மகனானவனிற்கு அநேக நண்பர்கள் இருந்தார்கள். அவனுடைய பெற்றோர் அவனை நோக்கி: உன்னுடைய நண்பர்கள் யார் என்பதைக் குறித்து நீ மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று பல முறை அறிவுரை கூறியிருந்தார். அவன் தன் தகப்பனை நோக்கி: நான் இப்போது சிறு பிள்ளையல்ல. என்னுடைய நண்பர்களைத் தெரிந்து கொள்வதற்கு கூட எனக்கு சுதந்திரம் இல்லையா என்று கோபித்து கொண்டான். தன்னுடைய பிறந்த தினமன்று அவன் தன் நண்பர்கள் யாவருக்கும் பெரிய விருந்தை ஏற்படுத்தினான். சில மணித்தியாலங்களின் பின்னர், அநேக பொலிஸ் வாகனங்கள் அந்த மாளிகையைச் சுற்றி வளைத்து, தேடுதல் நடத்தினார்கள். அந்த விருந்திலே சட்டவிரோதமான காரியங்கள் நடைபெற்றதால். பொலிசார் விசாரணை செய்தார்கள். அவன் நண்பர்கள்: ஐசுவரியவானின் மகனே, அப்படிச் செய்யச் சொன்னான் என்று அவன் மேல் பழியை போட்டுவிட்டார்கள். ஐசுவரியவானின் மகனோடுகூட பொலிசார் பலரை கைது செய்தார்கள். தகப்பனானவர் பொலிஸ் நிலையத்திற்கு சென்ற போது, மகனானவன்: அப்பா, என்னைக் காப்பாற்றுங்கள். என்னை இப்போதே வீட்டிற்கு கொண்டு செல்லுங்கள் என்றும் தகப்பனானவர் உடனடியாக தன்னை விடுவிக்க வேண்டும் என்றும் எதிர்பார்த்திருந்தான். பாருங்கள், இந்த மகனானவனிற்கு, தன் பருவத்திற்கு வந்ததும் தன் இஷ்டப்படி வாழ சுதந்திரம் தேவைப்பட்டது. தனக்கிருக்கும் சுதந்திரத்தின்படி தன் நண்பர்களை தெரிந்து கொண்டான். ஆனால், தன் தீர்மானங்களினால் ஆபத்து ஏற்பட்ட போது, தன் தகப்பன் தன்னை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று எதிர்பார்த்தான். இன்று, சில தேவ பிள்ளைகளும், இது என்னுடைய வாழ்வு, இது தனிப்பட்ட காரியம் என்று தங்கள் சுதந்திரப்படி வாழும் வழிகளையும், அதற்கு உடன்படும் ஐக்கியங்களையும் தேடுகின்றார்கள். ஆனால் நாட்கள் சென்று, தங்கள் சுதந்திரத்தினாலே பாதகமான பின்விளைவுகளைக் காணும் போது, தேவன் எங்கே? ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு நான் உன்னை விடுவிப்பேன் என்றாரே? என்று குரலெழுப்புகின்றார்கள். தேவனுடைய பாதுகாப்பு ஒருவனுக்கு தேவை என்றால், அவன் தன் இஷ்டப்படி சுதந்திரமாக தீர்மானங்களை எடுக்காதபடிக்கு, தேவனுடைய கட்டளைகளுக்கு, கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். அப்படி நடக்கின்றவனுடைய சத்தத்தையே தேவன் கேட்பார்.

**நீதிமொழிகள் 19:16**

**கட்டளையைக் காத்துக் கொள்ளுகிறவன் தன் ஆத்துமாவைக் காக்கிறான்;**

**ஜெபம்:** எத்தீங்கும் அணுகாமல் என் ஆத்துமாவை காக்கும் தேவனே, உம்முடைய கட்டளைகளின் வழியே என்னுடைய பாதுகாப்பு என்பதை நான் உணர்ந்து அந்த வழியிலே நடக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கீழ்ப்படிவோடு கற்றுக்கொள்ளுங்கள்

போதகரே, நான் பிறப்பதற்கு முன்பாகவே ஆண்டவர் இயேசுவை நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள். என்னிடம் பெலவீனங்கள் உண்டு. உங்கள் வாழ்விலுள்ள முதிர்ச்சியை என்னிடம் நீங்கள் எதிர்பார்க்க முடியாது என்று ஒரு இளைஞன் தன் போதகரிடம் கூறினான். அதற்கு அந்தப் போதகர்: மகனே, நீ கூறியது நூற்றுக் நூறு வீதம் உண்மை. நான் என் வாலிப நாட்களை கடந்து, பல அனுபவங்களுக்கூடாக வந்திருக்கின்றேன். நான் என் வாழ்க்கையில் எடுத்த தீர்மானங்கள் யாவும் சரியானவைகள் அல்ல. நான் என் சொந்த புத்தியில் சார்ந்து எடுத்த தீர்மானங்களால் பல நோவுகள் ஏற்பட்டிருந்தது. அவைகளின் சத்தம் இன்னும் எதிரொலிக்கின்றது. நீயோ, உன் வாழ்க்கையில் எடுக்க வேண்டிய முக்கியமான தீர்மானங்கள் வெகு சீக்கிரத்தில் வருகின்றது. அதே வேளையிலே, நீ விட்ட தவறுகளும் பாரதூரமானவைகளும் அல்லவே. “என்னிடம் பெலவீனங்கள் உண்டு. உங்கள் வாழ்விலுள்ள முதிர்ச்சியை என்னிடம் நீங்கள் எதிர்பார்க்க முடியாது” என்று நீ உன் நிலையை நியாயப்படுத்திக் கூறுகின்றாய் ஆனால் உன்னிலும் முதிர்ச்சியடைந்தவர்கள் உனக்கு அறிவுரை கூறும்போது, நீ அவர்களின் சொல்லைக் கேளாமல், உன் வாழ்க்கையை வெற்றியோடு ஓடி முடித்தவன் போல அவர்களுக்கு போதிக்கின்றாய்; நீ கூறுவதும் செய்வதும் ஒன்றோடொன்று முரணாக இருக்கின்றதே என்று அவனுக்கு அவர் பதிலளித்தார். பிரியமானவர்களே, இன்றைய நாட்களிலே அநேகர் அந்த வாலிபனைப் போல தங்கள் குற்றங்களை நியாயப்படுத்தும்படி தங்களைத் தாழ்த்திக் கொள்கின்றார்கள் ஆனால் அந்த குற்றங்களிலிருந்து விடுதலையடைவதைப் பற்றி போதிக்கும் ஊழியர்களுக்கு எதிர்த்து நிற்கின்றார்கள் அல்லது இது என் தனிப்பட்ட வாழ்வு அதற்குள் நீங்கள் வராதிருங்கள் என்று தங்களைச் சுற்றி தாங்ளே ஒரு அக்கிரமத்தின் மதிலை கட்டியெழுப்புகின்றார்கள். இவர்கள் கர்த்தருடைய வேதத்தையும் அவர் நியமித்த ஒழுங்குகளையும் அசட்டை செய்வதால், இவர்களுடைய ஜெபம் கேட்கப்படாதபடிக்கு இவர்கள் தங்களைச் சுற்றி கட்டிய மதிலே இவர்களுக்கு தடையாக இருக்கின்றது. பெருமையுள்ளவர்களுக்கு கர்த்தர் எதிர்த்து நிற்கின்றார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கின்றார். எனவே கர்த்தருடைய வார்த்தைக்கும் அவர் நியமித்த ஒழுங்குகளுக்கும் அதிகாரங்களுக்கும் கீழ்ப்படியுங்கள். அப்பொழுது நீங்கள் கண்காணாத தேவனுக்கு கீழ்ப்படிவீர்கள்.

**1 பேதுரு 5:5**

**நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்;**

**ஜெபம்:** என் வாழ்வின் நிலையை அறிந்த தேவனே, நான் நாளுக்கு நாள் தேவ சாயலிலே வளரும்படிக்கு, உம்முடைய திருவசனத்தை போதிக்கின்றவர்களுக்கு மனத்தாழ்மையோடு கீழ்படியும்படிக்கு என்னை வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கற்பனைகள் பாரமானவைகளுமல்ல

ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். அவர்களில் இளையவன் தகப்பனை நோக்கி: தகப்பனே, ஆஸ்தியில் எனக்கு வரும் பங்கை எனக்குத் தரவேண்டும் என்றான். அந்தப்படி அவன் அவர்களுக்குத் தன் ஆஸ்தியைப் பங்கிட்டுக்கொடுத்தான். சில நாளைக்குப்பின்பு, இளையமகன் எல்லாவற்றையும் சேர்த்துக்கொண்டு, தூரதேசத்துக்குப் புறப்பட்டுப்போய், அங்கே துன்மார்க்கமாய் ஜீவனம்பண்ணி, தன் ஆஸ்தியை அழித்துப்போட்டான். அந்த இளையவன் மூத்தவனைப் போல பல ஆண்டுகளாக தந்தையோடு வாழ்ந்தவன். தந்தை வீட்டிலே இவனுக்கு பங்கு உண்டு. வீட்டிலே அவனுக்கு குமாரனுடைய உரிமைகளும் சலுகைகளும் இருந்தது. அங்கே இவனுடைய விவகாரங்களை கவனிப்பதற்கு ஊழியர்கள் இருந்தார்கள். ஒருக்காலும் தந்தையின் கட்டளையை மீறி நடக்காத மூத்த சகோதரன் இவனக்கு இருந்தான். ஆனால் இளையவன், தன் தந்தையின் கட்டளையை மீறும்படிக்கு துணிகரம் கொண்டான். அதனால், இவன் தன் வாழ்வை தன் விருப்பப்படி வாழும் சுதந்திரம் வேண்டும் என்று தன் இருதயத்திலே நிச்சியியத்துக் கொண்டதால், தந்தையின் வீட்டிலிருந்து தனக்கு சேரவேண்டிய பங்கை பிரித்தெடுத்துக் கொண்டான். தன் தந்தையிடமும், சகோதரனிடமும், தந்தையின் ஊழியர்களிடமும் இருந்த தன்னை தூரப்படுத்திக் கொள்ளும்படி, தூர தேசத்திற்குச் சென்றுவிட்டான். அவன் சென்ற தேசத்திலே, அவனுக்கு சுதந்திரம் இருந்தது. அவனுக்கு கட்டளை போடுவதற்கு யாரும் அங்கே இல்லை. கையிலே பணம் உண்டு. எனவே, அவன் சுதந்திரம் என்று எதை நினைத்தானோ, அதை தன் வாழ்வில் நடப்பித்தான். துன்மார்க்கமாய் வாழ்வதே அவன் வாழ்வில் அவன் விரும்பிய மிகப்பெரிய சுதந்திரம். அவன் உல்லாசமாய் வாழ்ந்து,ஸ்திரிகளிடத்திலே தான் தந்தையிடமிருந்து பெற்றுக் கொண்ட பங்கை அழித்துப் போட்டான். வாழ்வில் சுதந்திரத்தை பெற்றுக் கொள்ளும்படி சென்ற அவன் துன்மார்க்கம் என்னும் அடிமைத்தனத்திற்குள் சிக்கிக் கொண்டான். உல்லாசமான வாழ்வைத் நாடிச் சென்ற இளையவன், தன் வாழ்வின் சமாதானத்தை இழந்து போனான். பிரியமானவர்களே , மனந்திரும்பும் பாவிகளை தேவன் அரவணைத்து சேர்த்துக் கொள்வார். நாம் தேவனை விட்டு பின்மாற்றமாய் போவதற்கு அவருடைய கட்டளைகள் பாரமானவைகள் அல்லவே. அவைகள் நம்முடைய வாழ்வில் சமாதானத்தையும், கர்த்தருடைய பாதுகாப்பையும் தருகின்றது. முடிவிலே நம்மை கர்த்தருடைய சுதந்திரத்திலே சேரும்படிக்கு நம்மை வழிநடத்துகின்றது.

**1 யோவான் 5:3**

அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல.

**ஜெபம்**: அன்புள்ள பரலோக தந்தையே, இந்த உலகம் தரும் சுதந்திரத்தின் முடிவிலே அழிவு இருக்கின்றது என்பதை கண்டு கொள்ளும்படிக்கு பிரகாசமுள்ள மனக் கண்களை தந்து என்னை வழிடநத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பெலவீன நேரத்திலே பெலன்

கர்த்தருடைய ஊழியயத்தின் நிமித்தமாக மோட்டார் வண்டியியொன்றிலே சென்று கொண்டிருந்த ஊழியரொருவர், எதிர்பாராத விபத்தொன்றில் அகப்பட்டதால், அவருடைய இரண்டு கால்களும் செயலிழந்து போனது. அதினிமித்தம் அவர் வேதனையோடு இருந்த வேளையிலே, "உன் பெலவீனத்தில் என் கிருபை உனக்குப் போதும்" என்ற வசனத்தை தேவ ஆவியானவர் அவருக்கு நினைப்பூட்டி அவரை திடப்படுத்தினார். அவர் தொடர்ந்து கர்த்தருடைய ஊழியத்தை செய்தார். என் பெலவீன நேரம் உம் கிருபை எனக்குப் போதும் என்ற வார்த்தையானது தேவ பிள்ளைகளுடைய வாழ்க்கையிலே அதிகமாக பேசப்படும் வார்த்தைகளிலொன்றாக இருக்கின்றது. மேலே கூறப்பட்ட சம்பவத்திலுள்ள ஊழியருக்கு கர்த்தர் பெலனாக வந்தார். ஏன்? அவருடைய பெலவீனமான நேரத்திலும் அவர் தேவ நீதியை நிறைவேற்றும்படிக்கு தேவனுடைய கிருபை அவருக்கு வெளிப்பட்டது. ஒரு சமயம், விபச்சாரத்திலே கையும் களவுமாக கண்டுபிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரீயை வேதபாரகரும் பரிசேயரும் இயேசுவினிடத்திலே கொண்டுவந்தார்கள். யூதருடைய நியாயப்பிரமாணத்தின்படி அவள் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும். ஆனாலும், அந்த வேளையிலே தேவ கிருபை அவளுக்கு வெளிப்பட்டது. ஏன்? அவள் தான் பெலவீனமுள்ளவள் என்று கூறி அந்த பாவத்திலே நிலைநிற்பதற்காகவா? இல்லை, நிர்மூலமாகாதபடிக்கு பாவத்திலிருந்து விடுதலையடையும்படிக்கே தேவ கிருபையானது அவள் வாழ்வில் வெளிப்பட்டது. ஒருவரும் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்று தேவனாகிய கர்த்தர் தம்முடைய கிருபையை மனிதர்கள்மேல் பொழிகின்றார். அவர் நீடிய பொறுமையுள்ளவராக இருக்கின்றார். ஏன்? அவர்கள் வேண்டிய மட்டும் பாவம் செய்வதற்காகவா? நான் பெலவீனமுள்ளவன் என்று சுய அனுதாபத்தை மையமாக வைத்து, பாவத்தில் தரித்திருப்பதற்காக அல்ல. தேவனுடைய வார்த்தையை கேட்கும் போது இனிப் பாவம் செய்யாமல் வாழ்வதற்கே தேவகிருபையானது நமக்கு கொடுக்கப்படுகின்றது. ஆத லால் கிருபை பெருகும் என்று பாவத்திலே நிலைநிற்காமல், நீங்கள் பாவம் செய்கின்றீர்கள் என்று சுட்டிக் காட்டப்படும் வேளையிலே உடனடியாக அதிலிருந்து வெளியேறுங்கள். உங்கள் பெலவீனத்தை மேற் கொள்ள தேவன் தரும் கிருபை போதுமானதிலும் மிகவும் அதிகமானதாயிருக்கின்றது.

**2 கொரிந்தியர் 12:9**

**என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார்.**

**ஜெபம்**: பெலவீன நேரத்திலே கிருபை தரும் தேவனே, உம்முடைய கிருபையினால் நான் பெலவீனத்தை மேற்கொள்ளவும், உம்முடைய நீதியை நிறைவேற்றவும் என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை

தாவீது ராஜா, தேவனுக்கு விரோதமான இரண்டு பெரும் பாதகங்களை செய்தார் என்று வேதத்திலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. 1. ராஜாக்கள் யுத்தத்திற்கு போகும் காலத்திலே, தாவீது ராஜா எருசலேமிலே தரித்திருந்து, பத்சபாள் என்ற ஸ்திரியினிடத்தில் பிரவேசித்து, பாவம் செய்தார். (2 சாமுவேல் 11) 2. கர்த்தர் தேசத்தின் பெலன் என்பதை அறிந்திருந்தும், தன் பெலத்தை கணக்கிடும்படி, யுத்தத்திற்கு செல்லக் கூடிய வீரர்களை கணக்கிட்டார். (2 சாமுவேல் 24). இவை இரண்டும் ஒரு நாளிலே நடைபெறவில்லை, பல மாதங்களாக தாவீது ராஜா இந்தப் பொல்லாப்புக்களை செய்து வந்தார். இரண்டு தடவைகளிலும், தேவனாகிய கர்த்தர், தாவீது ராஜாவினிடத்தில் தன்னுடைய தீர்க்கதரிசியை அனுப்பினார். தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, தான் பாவம் செய்தேன் என்பதை உணர்ந்து கொண்டபோது. சமஸ்த இஸ்ரவேலின் ராஜாவாகிய தாவீது, “என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன் என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது. உமது சமுகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலும் இரும் (சங்கீதம் 51) என்றும் நான் இப்படிச் செய்ததினாலே பெரிய பாவஞ்செய்தேன் இப்போதும் ஆண்டவரே, உமது அடியானின் அக்கிரமத்தை நீக்கிவிடும், நான் மகா புத்தியீனமாய்ச் செய்தேன் என்றான். (2 சாமு 24). எந்தவிதமான நிபந்தனையுமின்றி, தன்னைத் தாழ்த்தி, நான் பாவம் செய்தேன் என்று தன்னை தேவனிடத்திலே ஒப்புக் கொடுத்தார். தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று எழுதியிருக்கின்ற பிரகாரமாக தன்னைத் தாழ்த்தி தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்த தாவீது ராஜாவுக்கு தேவன் கிருபை செய்தார். அக்கிரமத்தினின்று விடுதலையடையும் போக்கை உண்டுபண்ணினார். ஆனால் தம்முடைய கிருபையை உதாசினப்படுத்தும் பெருமையுள்ளவர்களுக்கு கர்த்தர் எதிர்த்து நிற்கின்றார். எனவே, தேவ கிருபையை உங்கள் வாழ்வில் நன்மைக்காக பயன்படுத்தும்படி தேவனுடைய சமுகத்திலே உங்களைத் தாழ்த்துங்கள். தேவன் அதிக கிருபை அளிக்கின்றாரே.

**யாக்கோபு 4:6**

ஆதலால் தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது.

**ஜெபம்**: தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபையளிக்கும் தேவனே, நான் தவறி விழும்போது நான் என் பெருமையினால் என் நிலைமையை நியாயப்படுத்தாதபடிக்கு உணர்வுள்ள இருதயத்தைத் தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்

ஒரு அனுபவமிக்க ஊழியர், குற்றமொன்றிலே அகப்படிருக்கும் இளம் ஊழியரொருவரை சந்தித்துப் பேசி, அவரை நல்வழிப்படுத்தும்படிக்கு சென்றிருந்தார். குற்றத்தில் அகப்பட்டிருக்கும் அந்த இளம் ஊழியருக்கு தேவ வார்த்தைகளை எடுத்துக் கூறி, குறித்த சூழ்நிலையிலே செய்ய வேண்டிய காரியங்களை எடுத்துரைத்தார். அவர் கூறிய ஆலோசனைகளைக் கேட்பதற்கு, இளம் ஊழியருக்கு மிகவும் கடினமானதாக இருந்தது. அந்த இளம் ஊழியர் அனுபவமிக்க ஊழியரை நோக்கி: பல ஆண்டுகளுக்கு முன்னர் நீங்கள் செய்த குறித்த குற்றத்தைவிட, நான் செய்திருப்பது பரவாயில்லை என்று கூறி தனக்கு ஆலோசனை கூறும் மூத்த ஊழியருக்கு எதிர்த்து நின்றார். பல ஆண்டுகளுக்கு முன், அந்த அனுபமிக்க மூத்த ஊழியர் தவறியது உண்மை. ஆனால், அந்த நாட்களிலே, தேவனாகிய கர்த்தரின் ஆலோசனையை அவர் ஏற்றுக் கொண்டதால், கர்த்தர் அவரை சகல இடுக்கண்களிலுமிருந்து விடுவித்து மறுபடியும் ஊன்றக் கட்டினார். அவருடைய பாவங்களை தேவன் தன்னுடைய கணக்கிலிருந்து அகற்றி, கழுவி சுத்திகரித்துவிட்டார். தேவனுடைய பார்வையிலே அது முடிந்த கதை. பரிசுத்த வேதாகமத்திலே, தேவனாகிய கர்த்தர் தம்முடைய தூதர்கள் வழியாக தம்முடையவர்களுக்கு செய்தியை அனுப்பிய போது, பயபக்தியுள்ளவர்கள், பயத்தோடும் நடுக்கத்தோடும், தேவனுடைய தூதனை ஏற்றக் கொண்டார்கள். அதனால் அவர்கள் தேவனுக்கு கீழ்ப்படிந்தார்கள். பிசாசானவனுக்கும் அவன் பாவம் செய்யும்படி அனுப்பும் அவனுடையவர்களுக்கும் எதிர்த்து நின்றார்கள். ஆனால் இன்று, தேவனுடைய பிள்ளைகளோ, தேவனுடைய தூதை கொண்டு வரும் தேவனுடைய தாசர்களுக்கு எதிர்த்து நிற்பதால், தேவனுக்கு எதிர்த்து நின்கின்றார்கள். தங்கள் மாம்ச இச்சையை நிறைவேற்றும்படி பிசாசானவன் அனுப்பும் தூதுகளை ஏற்றுக் கொண்டு அவர்களோடு சமரசமாகின்றார்கள். பிரியமானவர்களே, தேவன் உங்களை நேசிப்பதால், நம்முடைய பெலவீன நேரங்களிலே தம்முடைய கிருபையை அளிக்கின்றார். அவர் பெலவீனத்தை மேற்கொள்ளும் வழியை போதிக்கும்படி தம்முடைய வார்த்தையை தம்முடைய தாசர்கள் வழியாக உங்களுக்கு அறிவிக்கின்றார். அந்தக் கிருபையை நீங்கள் வீணடிக்காதபடிக்கு தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள். அப்பொழுது பெருமைக்காரனாகிய பிசாசானவன் உங்களைவிட்டு ஓடிப் போவான்.

**யாக்கோபு 4:7**

ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்.

**ஜெபம்:** நான் நிர்மூலமாகதபடிக்கு என்னைக் காக்கும் தேவனே, நீர் உம்முடைய வார்த்தையை எனக்கு அனுப்பும் போது, பயபக்தியோடு அதை ஏற்றுக் கொண்டு மனந்திரும்பும் உள்ளத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வார்த்தையைக் காத்துக் கொள்ளுங்கள்

சமஸ்த இஸ்ரவேலையும் அரசாண்ட தாவீதின் குமாரரானாகிய சாலொமோனுக்கு, தேவன்தாமே மிகுதியான ஞானத்தையும் புத்தியையும், கடற்கரை மணலத்தனையான மனோவிருத்தியையும் கொடுத்தார். தேவனாகிய கர்த்தர் சாலொமோனை நோக்கி: ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தை உனக்குத் தந்தேன் இதிலே உனக்குச் சரியானவன் உனக்குமுன் இருந்ததுமில்லை, உனக்குச் சரியானவன் உனக்குப்பின் எழும்புவதுமில்லை. இதுவுமன்றி, நீ கேளாத ஐசுவரியத்தையும் மகிமையையும் உனக்குத் தந்தேன் உன் நாட்களில் இருக்கிற ராஜாக்களில் ஒருவனும் உனக்குச் சரியானவன் இருப்பதில்லை. அவன் மூவாயிரம் நீதிமொழிகளைச் சொன்னான் அவனுடைய பாட்டுகள் ஆயிரத்து ஐந்து. ஆனாலும் இப்படிப்பட்ட ஞானமும், மனோவிருத்தியுமுள்ள சாலொமோன், தேவனுக்கு விரோதமாக பாவம் செய்தான். அந்நிய தேவர்களுக்கு தூபம் காட்டினான். அந்த வேளையிலே கிருபையுள்ள தேவனாகிய கர்த்தர் சாலொமோனுக்கு இரண்டுவிசை தரிசனமாகி, அந்நிய தேவர்களைப் பின்பற்றவேண்டாம் என்று கட்டளையிட்டார். அவனோ, வல்லமையுள்ள தேவனுடைய கிருபையினை விடுத்து, அவன் ஆளுகையின் நாட்களிலே சமாதானத்தை உண்டாக்கிய கர்த்தரை விட்டுத் தன் இருதயத்தைத் திருப்பி, அவர் கற்பித்த எல்லாவற்றையும் கைக்கொள்ளாமற்போனான். அவன் தன் தகப்பனைப் போல தன்னை தேவ சமுகத்திலே தாழ்த்தி கிருபையின் நாட்களை நன்மையாக பயன்படுத்தாததால் கர்த்தர் அவன்மேல் கோபமானார். அதன்பின் கர்த்தர் அவனோடு பேசவில்லை. பிரியமானவர்களே, உங்களை பாவம் செய்யத் தூண்டும் பிசாசானவனின் சத்தத்திற்கு செவி கொடுப்பீர்களானால், அவன் உங்களை கொல்லவும் அழிக்கவுமேயன்றி வேறொன்றுக்கும் வரான் என்பதை திட்டமாக அறிந்து கொள்ளுங்கள். முதலாவதாக, அவன் பொய்க்கு பிதாவாக இருப்பதால், உங்களை வஞ்சித்து, நீங்கள் தேவனின் கட்டளையை மீறுவது உங்களுக்கு நன்மையானது என்று கூறுவான். பின்னர் காலம் கடந்து செல்லும் போது, அதன் பாதகமான பின்விளைவுகளை நீங்கள் கண்டு கொள்வீர்கள். தேவ கிருபை என்றமுள்ளது. அதனால் நாம் பாவம் செய்யும் போது தம்முடைய எச்சரிப்பின் சத்தத்தை அனுப்புகின்றார். மனந்திரும்பும்படி நாட்களைக் கொடுக்கின்றார். தப்பித்துக் கொள்ளும் போக்கையும் நமக்கு உண்டு பண்ணுகின்றார்.

**லூக்கா 11:28**

**தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, அதைக் காத்துக்கொள்ளுகிறவர்களே அதிக பாக்கியவான்கள் என்றார்.**

**ஜெபம்:** நன்மையால் என் வாயை திருப்தியாக்கும் தேவனே, நீர் கொடுத்திருக்கும் கிருபையின் நாட்களில் நீர் எனக்கு கற்பித்தபடி நான் உம்மை உறுதியாகப் பற்றிக் கொண்டிருக்க என்னை உணர்வுள்ளவனா(ளா)க்குவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உதவி செய்யும் தேவன்

“பலமுள்ளவனுக்காகிலும் பலனற்றவனுக்காகிலும் உதவிசெய்கிறது கர்த்தருக்கு லேசான காரியம்” என்ற வார்த்தை உண்மையுள்ளது. அப்படியானால், ஏன் இந்த வார்த்தையானது, வேதத்திலே காணும் சில பாத்திரங்களின் பலவீன நேரத்திலே அவர்களுக்கு பயனுள்ளதாக இருக்கவில்லை? கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: நீங்கள் அவர்களண்டைக்கும் அவர்கள் உங்களண்டைக்கும் பிரவேசிக்கலாகாது. அவர்கள் நிச்சயமாய்த் தங்கள் தேவர்களைப் பின்பற்றும்படி உங்கள் இருதயத்தைச் சாயப்பண்ணுவார்கள் என்று சொல்லியிருந்தார். ஆனாலும் சாலோமோன் ராஜா தேவனுடைய கட்டளையை மீறி நடந்ததால் பாவம் செய்தான். அது அவன் மிகவும் பெலனுமான இருந்த காலத்திலே அவனுக்கு இருந்தாலும் பெலவீனம். ஆனாலும் அவன் மனந்திரும்ப மனதில்லாமல், பார்வோனின் குமாரத்தியை நேசித்ததுமல்லாமல், மோவாபியரும், அம்மோனியரும், ஏதோமியரும், சீதோனியரும், ஏத்தியருமாகிய அந்நிய ஜாதியாரான அநேகம் ஸ்திரீகள்மேலும் ஆசைவைத்தான். அவர்களோடு ஐக்கியமாயிருந்தான். தேவனுடைய கட்டளைக்கு கீழ்படிந்து மனந்திரும்பவில்லை. காலங்கள் கடந்து வயது சென்று, உடற்பெலவீனம் அடைந்த நாட்களிலே, அவனுடைய மனைவிகள் அவன் இருதயத்தை அந்நியதேவர்களைப் பின்பற்றும்படி சாயப்பண்ணினார்கள். தேவனுடைய கிருபை அவனுக்கு இருந்த போதும், தேவனுடைய சத்தத்தை கேட்டவுடனே தன் தந்தையாகிய தாவீது ராஜாவைப் போல பாவத்தைவிட்டு மனந்திரும்பி தன்னை தேவனிடம் ஒப்புக்கொடுக்கும் சுபாவம் அவனுக்கு இருக்கவில்லை. அதனால், தேவனாகிய கர்த்தர் அவனோடு பேசுவதை நிறுத்திவிட்டார். பிரியமானவர்களே, தேவ கிருபை என்றுமுள்ளது என்பது உண்மை. ஆனால், ஒருவன் தேவனுடைய கட்டளையை மீறி நடக்கும்படி தன்னை பழக்கிக் கொள்ளும்போது, அவன் தேவ கிருபையை தகாதவிதமாக பயன்படுத்துவதால், பாதகமான பின்விளைவுகளை தன் வாழ்க்கையிலே உண்டு பண்ணிவிடுகின்றான். விழுந்திருப்பவனை தூக்கி விடுவது தேவனுக்கு லேசான காரியம் அவர் உதவி செய்வதற்கு ஆயத்தமுள்ளவராகவே இருக்கின்றார். ஆனால் விழுந்திருப்பவர்கள் அந்த உதவியை பெற்றுக் கொள்ளுவதற்கு ஆயத்தமில்லை. தேவனுடைய கிருபை வரத்தை ஒருவன் தன் வாழ்விலே நன்மைகேதுவாக பயன்படுத்தும் போது, பரிசுத்தமாகுதல் அவனுக்கு கிடைக்கும் பலன், முடிவோ நித்தியஜீவன்.

**2 நாளாகமம் 14:11**

கர்த்தாவே, பலமுள்ளவனுக்காகிலும் பலனற்றவனுக்காகிலும் உதவிசெய்கிறது உமக்கு லேசான காரியம்;

**ஜெபம்:** வருங்காலங்களைய அறிந்த தேவனே, நீர் எனக்குத் தரும் ஆசீர்வாதங்களை, உம்முடைய கட்டளைகளின்படி உம் திருச்சித்தத்தை நிறைவேற்ற பயன்படுத்தும்படிக்கு, என்னை வழிநடத்தியருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# எதினால் ஜெயிக்கப்பட்டிருக்கின்றீர்கள்?

ஒரு சிறு குழந்தையானது தனக்கு பிடித்த விளையாட்டுப் பொருளை, தன்னிடமிருந்து யாரும் பறித்துக் கொள்வதற்கு இடங்கொடுக்காது. அந்த விளையாட்டுப் பொருளின் ஆசை அந்தக் குழந்தையின் மனதை பற்றியிருப்பதால், அதன் அண்ணாமரோ, அக்காமாரோ அல்லது தாய் தந்தையரோ, அப்பொருளை தொட்டுக் கொள்வதற்குக்கூட விடாது. அது குழந்தைத்தனம், அல்லது குழந்தை அறியாமையினாலே அப்படிச் செய்கின்றது என்று சொல்லிக் கொள்வார்கள். இவ்வண்ணமாவே ஒவ்வொரு பருவத்திலுள்ளவர்களுக்கும் சில காரியங்களைக் குறித்த ஆசை மனதைப் பற்றிக்கொண்டிருக்கும். சிறு பையனுக்கு மாபில் (Marble) பைத்தியம். அதாவது, தனக்கு மிட்டாய் வாங்கி சாப்பிடும்படி பெற்றோர் கொடுக்கும் பணத்திற்கு மிட்டாய் வாங்காமல், விதவிதமான மாபிலை வாங்கிச் சேர்த்துக் கொள்வான். இப்படியாக வளர்ந்து வரும்போது தொழிநுட்பச் சாதனங்கள், வாகனங்கள், வீடுகள் போன்றவற்றை வாங்கிக் கொள்வதிலும் அவைகளை பெருக்குவதிலும் இருக்கும் ஆசை மனதைப் பற்றிக் கொள்கின்றது. குழந்தைப் பருவமும், சிறிய பிள்ளைகளாக இருக்கும் பருவமும் அறியாமையின் காலமாக கருதப்பட்டால், எந்தப் பருவத்தில் இப்படிப்பட்ட ஆசைகள் பொருளாசையாக மாறுகின்றது? அப்படி மாறுவதற்குரிய அறிகுறிகள் என்ன? நிச்சயமாக இந்தக் கேள்விகளை ஒவ்வொருவரும் தங்களிடத்திலே கேட்டு, தங்கள் நிலையை ஆராய்ந்து அறிந்து கொள்வது மிகவும் நல்லது. சிறு குழந்தையின் உள்ளத்திலே தன்னை சூழவுள்ள தனக்கு அன்பானவர்களைவிட தன்னுடைய விளையாட்டுப் பொருளே அருமையானது என்று எண்ணிக் கொள்கின்றது. அதுபோலவே, வயதிற்கு வந்தவர்களும் எதின் மேலே ஆசை வைத்திருக்கின்றாரகளோ அவைகளை தங்கள் இருதயத்திற்கு அருமையானவைகளாக்கிக் கொள்கின்றார்கள். உயிரற்றதும், அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டிருக்கின்றதுமான இவ்வுலக பொருட்களை, நித்திய ஜீவனை பெறக்கூடிய மனிதர்களுக்கு மேலாக உயர்த்துகின்றவன், குழந்தைத்தனமுடையவனாய் அறியாமையிலே வாழ்கின்றான். எதினால் ஒருவன் ஜெயிக்கப்பட்டிருக்கிறானோ அதற்கு அவன் அடிமைப்பட்டிருக்கிறானே. பிரியமானவர்களே, நித்திய ஜீவனுக்கென்று அழைப்பைப் பெற்ற நாம் ஒவ்வொருவரும், நம்மை நாம் நிதானித்து அறிய வேண்டும்.

**2 பேதுரு 2:19**

**எதினால் ஒருவன் ஜெயிக்கப்பட்டிருக்கிறானோ அதற்கு அவன் அடிமைப்பட்டிருக்கிறானே.**

**ஜெபம்:** மேலானவைகளை தேடும்படி அழைத்த தேவனே, என் ஆசை உம்மைப் பற்றியிருக்கவும், இயேசுவைப்போல இந்த உலகத்தை நான் ஜெயங் கொள்ளவும் எனக்கு ஞானமுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அளக்கப்படும் அளவு

ஒரு வயதானவர், கிழமைதோறும் தன் பேரப்பிள்ளைகளை சந்திக்கும் போது, அவர்களுக்கு பல கதைகளைக் கூறி, அவர்களோடு சேர்ந்து விளையாடி வருவார். அந்த வேளைகளிலே, தன் பேரப்பிள்ளைகளின் மனதிலே, நல்ல வித்துக்களை அவ்வப்போது போட்டுக் கொள்வார். ஒரு நாள், அவர் தன் பேரப்பிள்ளைகளை நோக்கி: எல்லாவற்றையும் தங்களுக்கென்று சேர்த்து வைக்கின்றவர்களின் ஆசை சேர்த்து வைக்கும் பொருட்களிலே இருக்கும். நீங்களோ அப்படியிருக்காமல், உங்களிடம் உள்ளதை ஏழை எளியவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று கூறினார். பேரப்பிள்ளைகளில் மூத்தவன்: தாத்தா, அப்படியானால் எவ்வளவு பொருட்களை நாம் எங்களுக்கென்று சேர்த்து வைக்க வேண்டும்? எவ்வளவு பொருட்களை ஏழைகளுக்கு கொடுக்க வேண்டும் என்று கேட்டான். அதற்கு பாட்டனார் மறுமொழியாக: ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது எனவே நீ கர்த்தருக்கு எவ்வளவு பொருட்களை கொடுக்க விரும்புகின்றாயோ அவ்வளவு பொருட்களை கொடு என்று கூறினார். பிரியமானவர்களே, நாம் எவ்வளவு பொருட்களை நாளைக்காக சேர்த்து வைக்க வேண்டும்? எவ்வளவு பொருட்களை வறியவர்களுக்கு கொடுத்துவிட வேண்டும்? என்பதைக் குறித்து ஒவ்வொருவரும் சிந்தித்து தங்கள் தீர்மானங்களை தங்கள் இருதயத்தில் எடுக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, ஏதோ காரணத்தினாலே, நீங்கள் வறுமைக் கோட்டிற்குள் வாழ்கின்றீர்கள். நாளாந்த உணவை பிள்ளைகளுக்கு கொடுப்பது பெரிய போராட்டமாக இருக்கின்றது. வீட்டிலே இருக்கும் வயதுக்கு வந்த பெண் பிள்ளைகளுக்கு கூட உடுத்துவதற்கு தகுந்த ஆடைகள் இல்லை. பாடசாலைக்குச் செல்வதற்கு வசதிகள் ஏதுவும் இல்லை. மழைகாலம் சமீபமாகின்றது ஆனால் தங்குவதற்கு ஏற்ற உறைவிடம் இல்லை. உங்கள் நிலைமை இப்படியாக இருந்தால், மற்றவர்கள் எவ்வளவாக உங்களுக்கு உதவ வேண்டும் என்று நீங்கள் விரும்புவீர்கள்? நீங்கள் இந்த பூமியிலே இல்லாத நாட்களிலே, உங்களுடைய பிள்ளை பட்டினியாய் இருந்தால், எவ்வளவு நாட்கள் மற்றவர்கள் உங்கள் பிள்ளையை கவனிக்க வேண்டும் என்று விரும்புவீர்கள்? பிறர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் விரும்புகின்றீர்களோ, அதன்படி நீங்கள் அவர்களுக்கு இப்போது செய்யுங்கள்.

**மாற்கு 4:24**

**எந்த அளவினால் அளக்கிறீர்களோ, அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்;**

**ஜெபம்**: இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவனே, இந்த உலகிலே பல உபத்திரவங்கள் மத்தியிலே வாழும் வறியவர்களுக்கு நான் மனப்பூர்வமாக உதவி செய்யும்படி உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# எங்கள் ஆசை எதைப் பற்றியிருக்கின்றது?

இன்று இரவு என்னுடைய நண்பர்களுடன் நான் இரவு விருந்து சாலைக்கு செல்லவேண்டும் என்று மகனானவன் தன் பெற்றோரிடம் கூறிக் கொண்டான். அதற்கு அவன் பெற்றோர்: மகனே, அது நீ செல்ல வேண்டிய இடமல்ல, நீ அங்கே போகாதே என்று கேட்டுக் கொண் டார்கள். மகனானவனோ: நாட்டின் சட்டப்படி எனக்கு உரிமை உண்டு. அப்படியானால் ஏன் அப்படியான சட்ட த்தை நாட்டிலே ஏற்படுத்தியிருக்கின் றார்கள். நான் எப்படியாவது அங்கு செல்லுவேன் என்று கூறி, பெற்றோ ரோடு எதிர்வாதம் பேசி, தான் நினைத் தபடியே இரவு விருந்து சாலைக்கு சென்றுவிட்டான். இந்த வாலிபனுடைய மனதைப்பற்றியிருக்கும் ஆசை என்ன? எதனால் இந்த வாலிபன் ஜெயிக்கப் பட்டிருக்கின்றான்? தன்னை பெற்று வளர்த்த தாய் தந்தையரின் மனதை வேதனைப் படுத்துவது அவனுக்கு அற்பமான காரியமாக இருந்தது. அந்த வாலிபனுக்கு பெற்றோர் இருந்தது போல, நமக்கு ஒரு பிதா பரலோகத்திலே இருக்கின்றார். இந்த உலகத்திலுள்ள நன்மை செய்யும் பெற்றோரைவிட அவர் நம்மை அதிகமாக நேசிக்கின்றார். நம்மை பர லோகத்திற்கு வரும்படியாக அழைப்பை கொடுத்திருக்கின்றார். ஆனால், அழைப்பை பெற்றவர்களின் நிலைமை எப்படியாக இருக்கின்றது? அந்த வாலிபன் கூறியதைப் போல, சிலர், நான் என் வேலையை தக்க வைப்பதற்காக அல்லது வியாபாரத்திற்காக எதையும் செய்வேன் என்று கூறுகின்றார்கள். வேறு சிலர், அவரைத் திருமணம் செய்யவதற்காக அல்லது அவளைத் திருமணம் செய்வதற்காக நான் எதையும் செய் வேன் என்று சபதம் கூறுகின்றார்கள். இன்னும் சிலர், உல்லாசப் பய ணம் செய்வதற்கு நான் எப்போதும் ஆயத்தம் என்று சொல்லிக் கொள் வார்கள்.இவர்களுடைய வாழ்க்கையிலே வெவ்வேறான ஆசைகள் பற் றியிருக்கின்ற போதிலும், அவைகளில் பொதுவான நோக்கமாகனது ஒன் றாகவே இருக்கின்றது. அதாவது, தங்கள் ஆசையை நிறைவேற்றும்ப டிக்கு இவர்கள் எதையும் செய்து கொள்ள ஆயத்தமுள்ளவர்களாக இரு க்கின்றார்கள். பரம அழைப்பும், தேவ சித்தத்தை செய்வதும், தேவனை ஆராதிப்பதும் இவர்கள் வாழ்க்கையிலே இரண்டாவது இடத்திற்கு சென் றுவிடுகின்றது. உங்கள் இருதயத்திலே முதலிடத்தை பெற்றிருக்கும் ஆசை என்ன? கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம பந்தயப் பொருளை பற்றியதாகவே இருப்பதாக.

**பிலிப்பியர் 3:12**

கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்க ப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடருகி றேன்.

**ஜெபம்:** பரலோக தேவனே, அழிந்து போகின்ற இந்த உலக சுகபோக ங்களிலே என் ஆசையை வைக்காமல் அழியாமையை பற்றிக் கொள் வதே என்னுடைய ஆசையாக இருக்கும்படி என்னை உணர்வுள்ளவ னா(ளா)க்குவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நேசிக்கின்ற பிதா

பிள்ளைகள் விரும்பி கேட்பதற்கு மேலாகவே அவர்களுக்கு கொடுக்கின்றோம். அவர்களுடைய வைபவங்கள் யாவற்றையும் பெரும் கொண்டாட்டமாக பல்லாரயிரக்கண்ணாக பணத்தை செலவழித்து செய்கின்றோம். அவர்கள் கேட்பது எதையுமே அவர்களுக்கு நாம் தடை செய்வதில்லை. ஏனெனில் நாம் நம் பிள்ளைகயை அன்பு செய்து வருகின்றோம் என்று ஒரு பெற்றோர் கூறிக் கொண்டார்கள். பிள்ளைகளுக்கு மிகையாக கொடுப்பதும், அவர்கள் விரும்பியதை செய்வதும், ஊர் உலகம் அறிய வைபவங்களை கொண்டாதுவதும் உண்மையான அன்பின் வரைவிலக்கணம் அல்ல. நமக்கொரு பரம பிதா இருக்கின்றார். அவர் நம்மை தந்தையைப் போல தோளிலே சுமக்கின்றவர். தாய் மறந்தாலும் நம்மை மறந்து போகாதவர். அவர் நன்மையான ஈவுகளையே பரலோகத்தலிருந்து நமக்கு கொடுக்கின்றவராக இருக்கின்றார். அவர் நம்மை உண்மையாக நேசிப்பதால், தம்முடைய வார்த்தைகள் வழியாக, நாம் தேறினவனர்களாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதி யுள்ளவர்களாகவும் வளரும்படிக்கும், நமக்கு உபதேசித்து, கடிந்து கொண்டு, சீர்திருத்தி, தேவ நீதியை நம்முடைய வாழ்வில் நடப்பிப்ப தற்கு கற்றுக் கொடுக்கின்றார். சில வேளைகளிலே, நாம் நன்மை என்று நினைக்கும் காரியங்களாவன பின்னர், பெரிதான தீமை உள்ளதாக மாறிவிடுகின்றது. அதை அறிந்த பரம தந்தை, நாம் நித்திய ஜீவனை இழந்து போகாதபடிக்கு அதை நம்மைவிட்டு அகற்றி விடுகின்றார். எனவே, இந்த உலகிலே நல்ல பெற்றோராக நாம் இருக்க விரும்பினால், எங்கள் பிள்ளைகள் பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை தங்களுடைய வாழ்க்கையிலே நிறைவேற்றுவதற்கு கற்றுக் கொடுத்து, அவற்றை நிறைவேற்ற இடங் கொடுக்க வேண்டும். பிள்ளைகள் கேட்கும் காரியங்கள் எல்லாவற்றிற்கும் ஆம் என்ற பதிலை கொடுக்க முடியாது. அன்றியும்: என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவரால் கடிந்து கொள்ளப்படும்போது சோர்ந்துபோகாதே. கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக் கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார். நம்முடைய பரம பிதா தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும்பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார். தமது விருப்பம் போல நம்மை நடத்தி, முடிவிலே மகிமையிலே நம்மை சேர்த்துக் கொள்வார்.

**எபிரெயர் 12:7**

தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ?

**ஜெபம்:** அன்புள்ள பரலோக பிதாவே, நீர் என் இருதயத்தின் நினைவுகளையும், காலங்களையும் அறிந்தவர். உம்முடைய சித்தம் என் வாழ்வில் நிறைவேறும்படிக்கு, என்னை நீர் சீர்திருத்தி வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஒருவரையொருவர் தேற்றுங்கள்.

நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை. கலக்கமடைந்தும்மனமுறிவடைகிறதில்லை. துன்பப்படுத்தப்பட்டும் கைவி டப்படுகிறதில்லை. கீழே தள்ளப்பட்டும் மடிந்துபோகிறதில்லை. இந்த உலகத்திலிருப்பவனைவிட நம்மோடு இருக்கின்ற கர்த்தர் பெரியவர். பரலோக யாத்திரிகளாக இந்த உலகத்தை கடந்து கொண்டிருக்கும் நம்மை, நிச்சயமாக தம்மிடம் சேர்த்துக் கொள்வார். கர்த்தராகிய இயேசுவை உயிரோடு எழுப்பினவர் நம் யாவ ரையும் இயேசுவைக் கொண்டு எழுப்பி, தமக்குமுன்பாக நிறுத்துவாரென்று நாம் அறிந்திருக்கின்றோம். அந்த நாளை எதிர்நோக்கி வாழ்ந்த பரிசுத்தவான்கள் தாமே உயிர்தெழும் நம்பிக்கையோடே இளைபாறுதலிலே பிரவேசித்திருக்கி ன்றார்கள். இப்போது உயிரோடிருக்கும் நாமும் அந்த நாளை ஆவ லோடு எதிர்பார்த்திருக்கின்றோம். ஒரு வேளை கர்த்தர் வர தாமதமா னால், நாமும் முன்னோடிகளாகிய பரிசுத்தவான்களைப் போல இளை ப்பாறுதலிலே பிரவேசிப்போம். கர்த்தருடைய வருகைமட்டும் உயிரோ டிருப்பவர்கள், கர்த்தருக்குள் நித்திரையடைந்து இளைப்பாறுகின்ற வர்களுக்கு முந்திக்கொள்வதில்லை. ஏனெனில், கர்த்தர் தாமே ஆர வாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத் தோடும், தேவ எக்காளத் தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார் அப்பொழுது கிறிஸ்துவுக் குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு, உயிரோடி ருப்பவர்கள் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக மேகங்கள்மேல், அவர் களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்பார்கள். ஆகையால், இந்த வார் த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள். நடக்க விருக்கும் இந்த காரியங்களை அறிந்த நாம் சோர்ந்துபோகிற தில்லை. எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷ னானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது. மேலும் காணப்படுகிற வைகளை யல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத் தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது. ஏனெனில், காணப்படுகிற வைகள் அநித்தியமானவைகள், காணப்படாத வைகளோ நித்தியமான வைகள். எனவே இளைத்துப் போய்விடாமல், உற்சாகத் தோடு முன் செல்லுங்கள். அழைத்தவர் உண்மையுள்ளவர்.

**1 தெச 4:18**

ஆகையால், இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்.

**ஜெபம்:** நித்திய வாழ்வை தருவேன் என்ற தேவனே, இந்த உலகத்திலே நாங்கள் எதிர்நோக்கும் உபத்திரவங்களினால் சோர்ந்து போகாமல், முன் னேறிச் செல்லும்படிக்கு எங்களை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.